www.padippakam.com

# கணையாழி

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்



படிப்பகம்

www.padippakam.com

# படைப்பாளிகள் - ஒரு பார்வை

இந்தப் பிரபஞ்சத்தில் இரண்டு படைப்பாளிகள், இந்தப் பிரபஞ்சத்தையே படைத்தளிக்கிறவன் ஒருவன்; அவனை இறைவன் என்று சொல்கிறோம். அவனுடைய படைப்புக்குள்ளேயே ஒரு படைப்பாக இலக்கியத்தைப் படைக்கிறவன் இன்னொருவன்; அவன் எழுத்தாளன். இவ் விரண்டு பேருமே இருமைகள் அற்றவர்கள். அதாவது, விரும்புதல், வெறுத்தல் என்னும் எதிர்மறையான இருமைக் குணங்களை விட்டொழித்தவர்கள். நன்மை தீமை, கோபம் தாபம், உண்மை இன்மை, வெம்மை தண்மை, உயர்வு தாழ்வு, ஏற்றம் இறக்கம் போன்ற இருமைகளில் ஒன்றை நேசிக்கவும் மாறானதைத் தூஷிக்கவும் செய்தால் இறைவனால் எவ்வாறு இரண்டு நிலைகளையும் சமபலத்தோடு படைக்க முடியும்? இரண்டையும் ஒன்றாகப் பாவிக்கிறவன்தான் நன்றாகப் படைக்கிறவன். நிறைகளை எவ்வளவு முழுமைப்படுத்துகிறானோ, அவ்வளவிற்குக் குறைகளையும் முழுமைப்படுத்துகிறானே! இறைவன் அத்தகைய படைப்பாளி. எழுத்தாளனும்கூட அப்படிப்பட்ட படைப்பாளி யல்லவா! நன்மையையும் தீமையையும் தன்னளவில் ஒன்றாகவே பாவித்து, தூய்மையையும் அழுக்கையும் ஒருமையுணர்வோடு முழுமைப் படுத்துகிறவனே எழுத்தாளன். ஒன்றை நேசித்து, மற்றொன்றை நிர்தாட்சண்யம் செய்துவிட்டால் அவன் படைப்பு வெறும் சொற்குப்பை யாகிவிடாதோ?



ஆகவே, இறைவனும் எழுத்தாளனும் இருமைகள் அற்ற ஒருமையாளர்கள். இறைவன் அசல். அந்த மகோன்னதமான அசலுக்கு எழுத்தாளன் ஒரு நகல். அசலை அறிவதற்கு ஞானம் தேவை. நகலை அளப்பதற்கு அறிவே போதும். இந்த அசலைப் பொறுத்த வரை அறிவுஜீவி என்பவனும் பாமரன்தான் அல்லவா?

படிப்பகம்

www.padippakam.com



# வணங்குகிறோம் கொர்பசேவ் அவர்களே!

**சர்வ வல்லமையுள்ளவராய் இருக்க வேண்டிய நீங்கள் மனிதராயிருக்க விழைந்து தனியராய் நிற்கின்றீர்களே!**

**அரசியல் விமர்சனங்கள் ஆயிரம் வரட்டும். சுதந்திரத்தைச் சுவாசிக்கிறவர்களுக்கு நீங்கள் சிம்மாசனவாசிதான்.**

❋

சோவியத் யூனியன் சிதறிப்போய்விட்டது. இந்தியாவும் அது போல் ஆகப்போகிறதா? ஆகாதெனில் பல்லாயிரம் கர்நாடகத் தமிழர்கள் அகதிகளானதேன்? அரசியல் சடங்காகிப் போன கண்டன அறிக்கைகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் மேலாக, இந்திய ஒருமையின் ஊனம் கண்டு மனம் பதறிச் செயல்படத் துடிக்கும் தலைமை எங்கே? இந்தியாவின் இன்றைய தேவை தேசியத் தலைமை, அல்லவா!

❋

''கோபல்ல புரத்து மக்கள்'' எனும் தம் நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது பெறும் திரு கி. ராஜநாராயணன் அவர்களுக்கு நம் பாராட்டுகள். அடுத்து வரும் இதழ்களில் 'தேசிய விருதுகளும் தமிழ் நூல்களும்' பற்றிய கண்ணோட்டம்.

❋

அடுத்த இதழில்
நெல்லை சு. முத்து எழுதும்
முப்பெரும் தமிழ்க் கவிஞர்களின் வினா விடை பற்றிய ஆய்வுரை.

படிப்பகம்

www.padippakam.com

# முத்தமிழ்ப் பொங்கல்

## நு. ர. ஆறுமுகம்

முத்துமுத்தாய் நெல்லெடுத்துக் குத்து;—அது
முத்தமிழாம் பச்சரிசிச் சத்து!
முக்கனிப்பி ழியலொடும்
சர்க்கரைநற் பாகினொடும்
மெச்சுதமிழ்ப் பானையில்நி றைத்து—மேவிப்
பொங்கலிடு முப்பாலுங்கு ழைத்து,

கொத்துகொத்து இஞ்சியிதழ்க் கொத்து;—தமிழ்க்
கோதைமுக மஞ்சளும்எ டுத்து
மெத்தமகிழ் 'தை'யலொடும்
அத்'தை'மகள் 'மை'யலொடும்
ஒத்ததமிழ்ப் பாட்டெடுத்தி சைத்து உயர்
ஒப்பனைம லர்களைப்பொ ருத்து!



வித்துவித்து தென்னைமர வித்து;—தமிழ்
வித்தகர்கள் வெள்ளைமனம் ஒத்து;
நெற்றுநெற்றாய் வாய்பிளக்கக்
கோத்துக்கொத்தாய்ப் பூமணக்க
இட்டெடுத்த பொங்கலைப்ப டைத்து சுடர்
விட்டெரியும் சூடத்தைக்கொ ளுத்து!

பத்துபத்துப் பாட்டின்தொகை பத்து; தொகைப்
பத்தனொடு எட்டனையும் நத்து!
பெற்றெடுத்த அன்னையினும்
பேணிவளர் தந்தையினும்
உற்றதமிழ்ப் பொங்கலெனும் சொத்து; உளம்
ஓங்குகரு வூலம்நிறை சித்து!

படிப்பகம்

www.padippakam.com



# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய
மாத இதழ்
ஜனவரி, 1992

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது

தனி இதழ் விலை ரூ.3.
ஆண்டுச் சந்தா ரூ.36.
சந்தாவை M.O. செய்க.

படைப்பில் உயிர்ப்பும் பார்வையில் தெளிவும் உள்ள எல்லா வகை இலக்கிய வெளிப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், 31, T.K.S.நகர் சென்னை-19இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப் பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:
ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை-600019.

இதழ் பற்றிய உங்களின் மதிப்பீடுகளும் எதிர்பார்ப்புகளும் இதழின் தளத்தை விசாலப் படுத்தும். இதழுக்கான உங்களின் சந்தாவும் நட்பும் இதழின் நலத்தைச் செழுமைப்படுத்தும்.

**படைப்பாளர்கள்:**

கவிதாசரண், இராம. கண்ணப்பன் என்.ஆர். தாசன் சி.ஆர். ரவீந்திரன் முத்து நிலவு துறவி குடந்தை பரிபூரணன் இரா. ஆனந்தி நு ர.ஆறுமுகம் தே.இராமதாசு

படிப்பகம்

www.padippakam.com

# ஞானத்தைக் கற்கவில்லை!

ஆசிரியர் பக்கம்

அருவி துயில்வதில்லை—கனி
அடித்துப் பழுப்பதில்லை—சின்னக்
குருவி கவல்வதில்லை—மலர்
கொய்து மலர்வதில்லை—பெண்மை
தெருவில் திரிவதில்லை—உண்மை
தேரில் வருவதில்லை—தென்றல்
உருவில் தெரிவதில்லை—அன்றில்
ஊடிப் பிரிவதில்லை.

தீயினில் தூசு இல்லை—உயிர்
தேடக் கிடைப்பதில்லை—அன்புக்
கோயிலில் காவல் இல்லை—பிள்ளைக்
குதலையில் பேதம் இல்லை—ஒளிச்
சாயல் இருள்வதில்லை—தமிழ்ச்
சாரம் குறைவதில்லை—காலம்
நோயில் விழுவதில்லை—நெஞ்சும்
நூற்று முடிப்பதில்லை.

கள்ள நிதி செதுக்கும்—கல்லில்
கடவுள் இருப்பதில்லை—அன்னை
பிள்ளைக்குப் பால் கறந்து—விலை
பேசித் திரிவதில்லை—பிள்ளை
எள்ளி நகைத்ததென்று—தந்தை
ஏலத்தில் விட்டதில்லை—தன்னை
உள்ளம் பகைத்ததென்று—நஞ்சை
உண்ணக் கொடுப்பதில்லை.



காற்றைக் குடிப்பதற்கு—யாரும்
காணிக்கை வைப்பதில்லை—மலர்
நாற்றம் முகர்வதற்கு—யாரும்
நன்றி நவில்வதில்லை—ஒளிச்
சேற்றினில் பாத்தி கட்டி—தெய்வச்
சேவைப் புனல் பெருக்கி—உயிர்
நாற்றை நடுவதற்கு—மக்கள்
ஞானத்தைக் கற்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



என்னைத்தமிழ் அன்னைபெற்றாள்
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.


# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று | ஜனவரி, 1992 | இதழ் மூன்று


## உயிர்ப் பாலம்

அன்றுநான் அற்பமாய் ஒதுக்கினேன்; இன்றதை
ஆராத னைசெய்கின்றேன்.

ஆராத னைசெய்த அற்பத்தை அற்பமாய்
அறிந்தின்(று) ஒதுக்குகின்றேன்.

வென்றுநான் பெற்றதாய் மகிழ்ந்ததெல் லாம்வெறும்
வேடிக்கை என்று கண்டேன்;

வெற்றிக்குத் தடையென்று விட்டவை தோல்விக்கு
விதையூன்றிப் போகக் கண்டேன்.

தின்றுமெய் வளர்த்தலே தலையாய கடன்என்று
தின்றுவாய் சோர்ந்த பின்னே

தின்னக்கி டைக்காமல் என்முன்னே கைநீட்டித்
தோற்றவரைப் பாவிகண்டேன்.

படிப்பகம்

www.padippakam.com

மன்றாடி அழைத்திடும் தாயிடம் ஊடிடும்
மதலையாய் வாழ்ந்துவிட்டேன்;
மாளாத தாய்மையின் மடியிலே இன்றுநான்
மகிழ்ந்தாட ஏங்குகின்றேன்.

சூடான உணவுக்(கு) உடல்வேர்த் திருக்கின்ற
செல்வர்க்குப் பரிந்துநின்றேன்;
செய்யாத சிறுமைக்(கு) அவர்முன்னே உடல்குன்றச்
சேவிக்கும் ஏழைகாணேன்.

ஏடாயி ரங்கோடி இதயமா மலர்வாழும்
இறைவனுக் கேங்கிடாமல்,
ஏன்என்ற கேள்வியில் யாவுமே அடக்கமென்(று)
எண்ணிஇறு மாந்துபோனேன்.

பாடாத பாட்டெல்லாம் பாடினேன்; பொய்பேசப்
பலகோடி சொற்கள் கற்றேன்;
பரிந்தேங்கிக் கீழ்மையைப் பற்றினேன்; இன்றுநான்
பரிகாரம் தேடுகின்றேன்.


ஓடாத ஓட்டமாய் மீளாத இடத்துக்கு
ஓடிநான் மறைந்திட்டாலும்
உயிர்ப்பால மீதினில் மௌனமாய் நடந்தேகி
உண்மையொளி கண்டுமீள்வேன்.



படிப்பகம்

www.padippakam.com

# விழிப்பு!



கடைசியில் சோர்ந்துபோய் நான் தூங்க முயன்றபோது, என் பிள்ளைப் பருவத்தில் நடந்த ஒரு துயரச் சம்பவம் நினைவுக்கு வந்தது. எனக்கு அப்போது பத்து வயது என்னுடைய தாயார் எங்கள் வயலுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது தலைக்கு மேலே ஒரு பருந்து பறந்தது. அதன் கால்களில் ஒரு கோழிக்குஞ்சு சிக்கிக்கொண்டு ஓலமிட்டது. அன்னை அதை நிமிர்ந்து பார்த்தபோது, எதிர்பாராத விதமாகப் பருந்தின் பிடியிலிருந்து கோழிக்குஞ்சு நழுவி, அவர்கள் மேல் விழுந்துவிட்டது. 'விர்' ரென்று கீழிறங்கிய பருந்து தன் காலால் அவர்களுடைய தலையில் மோதி விட்டுச் சென்றதுதான் மிச்சம். விழுந்தகுஞ்சைக் கணத்தில் பற்றி மறைத்துக் கொண்டார்கள்.


அன்னை அதை வீட்டுக்குக் கொண்டு வந்து, பருந்தின் நகம் பட்ட இடத்துக்கு மருந்துபோட்டு வளர்த்தார்கள். அந்தக் குஞ்சு மிகவும் அழகாய் இருந்தது. அதன் பூந்தளிர் இறகுகள் பஞ்சைவிட மிருதுவாய், கையில் தொடும்போதே வழுக்குப்படியாய் கிளுகிளுப்பூட்டின. ஒரே நாளில் அந்தக் குஞ்சு என் அன்னையிடம் ஒரு குழந்தையைப்போல ஒட்டிக்கொண்டுவிட்டது. பகலெல்லாம் அவர்கள் பின்னாலேயே சுற்றும். நீர்த்துறைக்குச் செல்லும்போது, 'கீச்கீச்' என்று சிணுங்கிக்கொண்டே பின்னால் ஓடும். எடுத்துத் தோள் மீது விட்டுக் கொண்டால், துளியும் அச்சமின்றி உட்கார்ந்து கொண்டு பவனி வரும். அதன் கண்களில் காண்பவர்களை அன்பு கொள்ள வைக்கும் ஒரு குறுகுறுப்பும், உலகத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாத அப்பாவித்தனமும் அழகாய் ஒளிரும்.

அன்னைக்கு அதனிடம் எல்லையில்லாத பாசம் வளர்ந்துவிட்டது. அதற்கு முத்தம் கொடுக்கும் போது, அது கீச்சிடும் இனிமையே மேலும் மேலும் முத்தமிடத் தூண்டும். அன்னை சாப்பிடும்போது அதற்கும் சில பருக்கைகளைப் போடுவார்.

www.padippakam.com

அவற்றைப் பொறுக்கித் தின்றுவிட்டு, அவர்கள் மடியில் ஏறி அமர்ந்துகொள்ளும். படுக்கப் போகும்போது அதுவும் படுத்துக் கொள்ள வரும். ஆனால் இரவில் பூனை வந்து பிடித்துக்கொள்ளுமே என்ற கவலையோடு ஒரு கூடையில் போட்டு மூடி, அதன் மேல் கல்லை வைத்துப் பத்திரப்படுத்துவார்கள். அந்தப் பிரிவுக்கு ஆற்றாத குழந்தையைப்போல அது கீச்சிடும். ''நான் பக்கத்தில் தான்டா இருக்கேன். நீ தூங்கு,'' என்று செல்லமாகச் சொல்லிக் கூடையைத் தட்டிக்கொண்டே தூங்குவார். அதுவும் பேசாமல் இருக்கும். இப்படியாகச் சில நாட்களில் அது ஒரு கோழிக்குஞ்சு என்ற நினைப்பே மறந்து, அம்மாவின் மனதில் ஒரு குழந்தையாகவே வளர்ந்துவிட்டது.

ஒருநாள் எதற்காகவோ அம்மா அவசரமாக வெளியே ஓடி வந்தார்கள். அவர்கள் பின்னாலேயே என் தம்பி அழுது கொண்டே ஓடினான். அம்மாவைத் தொடர்ந்து கீச்சிட்டுக் கொண்டு பறந்தோடிய கோழிக் குஞ்சு கணத்தில் என் தம்பியின் காலில் மிதிபட்டுக் குடல் பிதுங்கி, உடல் சிதைந்து, தரையோடு தரையாய் ஒட்டிவிட்டது. திரும்பிப் பார்த்த அன்னை அந்தக் கோரத்தைக் கண்டு ''ஓ'' வென்று அலறிவிட்டார். ''அடப் பாவி, பாவி, கொன்னுட்டியா? ஐயோ! ஐயோ!'' என்று தம்பியைப் பிளந்து கட்டி விட்டார்கள். அவன் பிரமித்து நின்று விட்டான். அம்மா தலையிலடித்துக்கொண்டு கதறினார்கள். எல்லாருமேதான் கண் கலங்கித் துக்கப் பட்டோம். தாங்க முடியாத துக்கத்தை உண்டு பண்ணிவிட்டுப் போய் விட்டது அந்தச் சின்னஞ்சிறு குஞ்சு. அதை எங்கள் வாசலிலேயே புதைத்தோம். மறு நாள் அதன் புதை குழியில் அம்மா பால் வார்த்தார்கள். ஒரு குழந்தைக்குரிய எல்லா மரியாதைகளுடனும் அது அடக்கம் செய்யப்பட்டது. அதன் பிறகு, பல நாட்கள் அம்மா அழுதார்கள். வருவோர் போவோரிடமெல்லாம் வாய் ஓயாமல் சொல்லிச் சொல்லிக் கலங்கினார்கள்.



ஆசிரியரின்
''புழுதிக் கோலம்''
என்னும் நூலிலிருந்து.

படிப்பகம்

www.padippakam.com



# காற்றின் நாயகன்

## இராம. கண்ணப்பன்

சிற்றின்பத்தில் தொடங்கிய ஆத்மராகம் பேரின்பம் என்ற ஜீவகீதத்தில் நிறைவுற வேண்டும் என்று பண் பாடிய ஞானப் பறவை கண்ணதாசன்.

இந்த இனிய இலட்சியத்தை எய்துவதற்கு முன் அவர் தனது வாழ்க்கைச் சாலையில் கண்ணுற்றதெல்லாம்:

இன்னா செய் நண்பர்களை; இடுக்கண் களைந்த விநாடியே, 'இவன் இளித்த வாயன்' என்று எள்ளிய இனியவர்களை; அன்பு காட்டி அடுத்துக் கெடுத்தவர்களை; பை வைத்த சட்டைதான் நண்பன் அணிவான் என்று பை இல்லாத சட்டை போட்டு வரும் நண்பர்களை; 'உன் பசிக்கு நான் சாப்பிடுகிறேன்' என்று சாப்பிட்டு விட்டு, அதற்கான கட்டணத்தையும் வசூல் செய்யும் பண்பாளர்களை; கை இருக்கிறது நம்மிடம் பை இருக்கிறது அவனிடம் என்ற கொள்கையாளர்களை; ஏழைகளை உய்விக்க அவதாரம் எடுத்த போலி அரசியல் சிற்பிகளை; யாருக்காக கண்ணீர் வடித்தார்களோ அவர்களது கண்ணீர்முத்துகளையே கடனாகப் பெற்றுத் தங்களது கட்டடத்தைக் கட்டிக் கொண்ட சமுதாயக் கொத்தனார்களை—

அவர் நினைத்துப் பார்க்கிறார்:

நல்ல சாலை என நம்பிப் புறப்பட்ட பயண வழித்தடத்தில் அவர் சந்தித்த தீமைகள், பாதத்தில் குத்திய முட்கள், பதைபதைக்க வைத்த பாதகச் செயல்கள், அவமானங்கள், ஏளனங்கள் அனைத்தும் அவரை வெட்கமுறச் செய்தன.

,இந்த வழி உனக்கு உகந்ததல்ல; போகாதே!' என்று, அந்த வழியை அறிந்துணர்ந்தவர்கள் சொன்னவை யெல்லாம் கேட்காது போனோமே என்று நைந்தார்.

தனது அனுபவங்களை யெல்லாம் அவர் வெளியிட்ட போது 'ஏமாளி' என்றும் 'கோமாளி' என்றும் அவரை அலட்சியப்படுத்தினர்.

ஒரு புறம் அழுகை; மறுபுறம் சிரிப்பு.

அழுவதா, சிரிப்பதா?

சிரிப்பதே சரி என்று தன்னிரக்க முடிவுக்கு வருகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

காலத்தின் கனிந்த அருளைப் பெற்றவர் கண்ணதாசன். சந்தர்ப்பங்கள் தானாவே அமையும். அவருள் கருக் கொண்டிருக்கும் எண்ணங்களுக் கேற்பவே திரைக் கதையின் சூழல் வடிவுற்று நிற்கும். அவரது அனுபவங்களை கதையின் பாத்திரம் ஏற்றுக் கொள்ளும்.

அப்படி ஒரு சூழல்— அனுபவம் வெளிவருகிறது.

சிரிப்பு வருது சிரிப்பு வருது
சிரிக்கச் சிரிக்க சிரிப்பு வருது
சின்ன மனுஷன் பெரிய மனுஷன்
செயலைப் பார்க்கச் சிரிப்பு வருது!
மேடை ஏறிப் பேசும் போது
ஆறுபோலப் பேச்சு
கீழே இறங்கிப் போகும்போது
சொன்ன தெல்லாம் போச்சு!
காசை எடுத்து நீட்டு
கழுதை பாடும் பாட்டு
ஆசை வார்த்தை கேட்டு
உனக்கும் கூட வோட்டு!

தனது ஜீவிய காலத்தில் ஆறு பொதுத் தேர்தல்களைச் சந்தித்து இரண்டாவது பொதுத் தேர்தலில் போட்டியிட்டும் தோற்றவர் கண்ணதாசன்.

மக்களிடத்தில் ஒன்று, மன்றில் ஒன்று, மனையில் ஒன்று என்று மும்முகம் காட்டிப் போலி வரலாறு படைத்த அரசியல் இயக்கங்களையும், அதன் தலைவர்களையும், அவர்களது நாக்கு நாட்டியத்தில் மயங்கி— அவர்கள் தரும் பரம பாதகக் காசுக்கு மயங்கி, தங்களது வாக்குகளை அளித்து, ஜனநாயகத்தைக் சேலி கூத்தாக்கியதையும் வார்த்தை வரிகளால் ஓவியமாக்கியுள்ளார்.

இந்த வரிகளுக்குள் பொதிந்து கிடக்கும் வேதனைகள் அரசியல் போலிகளைக் காட்டுவதாகும்.

இதனைப் புரிந்து கொண்டவர்கள் யார்?

'சிற்றினம் சேராதே' என்று வள்ளுவம் செப்புகிறது. கற்றவர்கள் எல்லோரும் கற்ற வழி நடந்தனரா?

சங்கை ஊதி விட்டார்கள். வார்த்தை நாதம் காற்றில் கரைந்து விட்டது.

பாவம், வள்ளுவமும் கண்ணதாசனும்.

சிற்றினம் இவ்வாறெனில், பேரினம்?...

பேரினம் மறைந்து பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன.

கவிஞர் கண்டது பேரினமல்ல; பேரினத்தில் சிற்றினம்.

அறச் சாலைகளும், அன்ன சத்திரங்களும் நிறுவி,

படிப்பகம்

www.padippakam.com



அதற்காக நிலவந்தங்கள் வழங்கிய வள்ளல் பெருமக்கள், வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். இன்று அவர்களது கொள்ளுப் பேரர்களின் கொள்ளுப் பேரர்களது எள்ளுப் பேரர்கள்தான் வாழ்கிறார்கள்.

அறச் சாலைகள் எல்லாம், அன்ன சத்திரங்கள் எல்லாம் இன்று சாலைகளின் பெயர்களில் மட்டுமே வாழ்கின்றன.

நாலு ரூபாய் நிதி கொடுத்துவிட்டு நாற்பதினாயிரம் ரூபாய்க்கு விளம்பரம் தேடிக் கொள்கிறவன்.

கள்ளக் கணக்கெழுதி அரசாங்கத்தை ஏமாற்றி ஆலயம் எழுப்பக் கல்வெட்டுப் பதித்துக் கொள்கிறவன்.

பிறன்மனை நயந்து பேரின்பம் காண அந்தரங்க மாளிகை கட்டுபவன்.

சுயலாப வேட்டைக்காக நண்பர்களை ஏமாற்றுகிறவர்கள்.

இன்றையப் பேரினம் இவர்கள்தான்.

உள்ள பணத்தைப் பூட்டி வைச்சு
வள்ளல் வேஷம் போடு
ஒளிஞ்சு மறைஞ்சு ஆட்டம் போட்டு
உத்தமன் போல பேசு!
நல்ல கணக்கை மாத்து
கள்ளக் கணக்கை ஏத்து
நல்ல நேரம் பாத்து
நண்பனையே மாத்து!

நீலரத்தம் பாய்ந்த முதலாளித்துவத்தின் ஏமாற்று எத்துவாளித் தனத்தை ஒரு நகைச்சுவைப் பாத்திரத்தின் வாயிலாக வெளிப்படுத்தி இருக்கிறார் கவிஞர்.

தன்னிரக்க அவலத்தில் நகைச்சுவை இணையும் போது, தன்னிரக்கம் திரைக்குப் பின்னுக்குப் போய்விடுகிறது.

தான் நடந்துவந்த பாதையில் தங்கி இளைப்பாறிய வழிநடைச் சத்திரங்களில் மனிதர்களையே காணவில்லையா?

தேடுகிறார்!

'யாரடா மனிதன் இங்கே?'

பகலில் விளக்கேற்றிக்கொண்டு மனிதனைத் தேடிய கிரேக்க ஞானியைப் போல் தேடுகிறார்.

'யாரடா மனிதன் இங்கே?'

உரத்த குரலில் வினவுகிறார்.

-படிப்பகம்

www.padippakam.com

'ஏன் இல்லையா?' —ஒருவன்

''கூட்டிவா அவனை இங்கே!''

வரிசை வரிசையாக வருகிறார்கள். ஒவ்வொருவரையும் கூர்ந்து கூர்ந்து உன்னிப்பாகப் பார்க்கிறார். ஒருவரும் மனிதராக அவருக்குப் படவில்லை!

மனிதரில் நாய்கள் உண்டு
மனதினில் நரிகள் உண்டு
பார்வையில் புலிகள் உண்டு
பழக்கத்தில் பாம்பும் உண்டு!

பாசம் காட்டுவது, ஏமாற்றுவது, மிரட்டுவது, கொலை செய்வது என நான்கு குணமும் கொண்ட மனித உருவங்கள்,

இந்த உருவங்களா மனிதர்கள்? இல்லை. இவர்கள் இறைவன் படைத்த குரங்குகள். தேடுதல் தொடர்கிறது.

நாயும் நரியும் புலியும் பாம்பும்
வாழும் பூமியிலே
மானம் பண்பு ஞானம் கொண்ட
மனிதனைக் காணவில்லை!

'எங்கே இருக்கிறான் மனிதன்?'

சுற்றிச் சுற்றி வந்து, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வருகிறார்.

சிரிப்பினில் மனிதனில்லை
அழுகையில் மனிதனில்லை
உள்ளத்தில் மனிதனில்லை

காரியச் சிரிப்பு, காரணச் சிரிபபு, அடுத்துக் கெடுக்கும் வஞ்சகச் சிரிப்பு,— இவனா மனிதன்?

அழுகை—அதிலும் உள்ளம் இல்லை.

கள்ள உள்ளம், வஞ்சக உள்ளம்—அவனும் மனிதனில்லை.

பிறகு...

'உறக்கத்தில் மனிதன் உண்டு!'

அனைத்தும் மறந்த அற்புதநிலை; மாளிகையில் படுத்திருக்கிறோமா, மயானத்தில் படுத்திருக்கிறோமா என்பதறியாத நிலை; எழுபத்து இரண்டாயிரம் நரம்புகளில் ரத்தம் மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிலை!

ஆகா! இந்நிலையில் மனிதன் எவ்வளவு உன்னதமானவன்!

வாழும் மிருகம் தூங்கும் தெய்வம்
நடுவே மனிதனடா
எங்கோ ஒருவன் இருந்தால் அவனை
உலகம் வணங்குமடா!

படிப்பகம்

www.padippakam.com



அநுபவ நெரிசலில் கவிஞரது உள்ளத்தில் கிளர்ந்தெழுந்துள்ள சிந்தனைகள் அனைத்தும் அற்புதமான பாடங்கள்.

படாத பாடு பட்டுத் தேடிய செல்வங்களையெல்லாம் அடாத வழியில் செலவு செய்யும் மகன். ஒரே மகன். திரண்ட செல்வத்துக்கு அவனே உரியவன். தந்தையால் கண்டிக்க முடியவில்லை.

'அமைதி இல்லை. நிம்மதி இல்லை,' என்று புலம்புகிறார் தந்தை.

அவரைச் சமாதானப்படுத்த வேண்டும்.

யாரால் முடியும்?

கவிஞரைத் தேடி வருகிறார் தயாரிப்பாளர். —வளரும்

# பாதுகாப்பு

பாட்டாளி மக்களுக்குப் பசியொன்றே பாதுகாப்பு!
கூட்டமிட்டுக் குறைகேட்டால் குண்டாந்தடி பாதுகாப்பு!

கள்ளச்சந்தைக் காரனுக்குக் கறுப்புப்பணம் பாதுகாப்பு!
குள்ளநரிக் கூட்டத்துக்குக் காக்கிச்சட்டை பாதுகாப்பு!

சாதிமதப் பேய்களுக்குச் சட்டந்தான் பாதுகாப்பு!
நீதியினைக் கேட்போர்க்கு நித்தம்சிறை பாதுகாப்பு!

பெண்ணுக்கு வழங்குவதோ பேச்சளவில் பாதுகாப்பு!
விண்முட்டும் சட்டத்தால் வீணருக்கே பாதுகாப்பு!

உண்டுநிதம் கொழுப்போர்க்கு உடல்வலிமை பாதுகாப்பு!
உணவுக்கே உழைப்போர்க்கு உறுதிமனம் பாதுகாப்பு!

கோழைகளாய் வாழ்வோர்க்குக் கோவில்களே பாதுகாப்பு!
ஏழைகளாய் வாழ்வோர்க்கு எதுவுமில்லை பாதுகாப்பு!

/தே. இராமதாசு/

படிப்பகம்

www.padippakam.com

# ஆசைத் தோழீ!

/இரா. ஆனந்தி/

நினைவுகள் யாவும்
ஒன்றுபட...

ரசனைகளில் இணையாக
மனம் லயிக்க...

நம் சந்திப்புகளில்
சாகித்யங்கள் உருவாக...

சிந்தனை சங்கமிப்பில்
தித்திப்புகள் ததும்ப ..

அன்பின் சக்தி
நம்மில் அணையாக...

நட்பின் ஆளுமையில்
நாம் மெழுகாக...

என் மகிழ்வு
உன்னில் அலையாக...

உன் காயங்கள்
எனக்கு ரணமாக...

உன் கானங்களில்
நான் தேடுபொருளாக...

என் எழுத்துகளில்
நீ பாடுபொருளாக...

இள மென்முறுவல்
இதழோரம் தேங்கியிருக்க...

கனிவு ஒன்றே
கண்களில் தங்கியிருக்க...

இனிதான தேடல்களில்
நீயும் உடனிருக்க...

மகிழ்வின் பெருக்கில்
உள்ளம் தத்தளிக்க...

உவப்பின் உச்சத்தில்
ஊமையாய்த் தவித்திருக்க...

உற்சாக வெள்ளத்தில்
ஆனந்தக் கரைபுரள...

இதமான உரையாடல்களில்
நேரம் பறந்துபோக...

விடைபெற்று நீயும்
தூ.. ரத்தில் சென்றுவிட ..

இப்போது நான்
அமைதி, ஆரவாரம்,
அத்தனையும் இழந்துநிற்க...



தோழீ!
என்னில் நீ
எத்தனை சுக சோகம்
விதைத்துச் சென்றுவிட்டாய்!

படிப்பகம்

www.padippakam.com



அன்று ஞாயிற்றுக் கிழமை. பீச் இரயில்வே நிலையத்தை நான் அடைந்தபோது பகல் ஒரு மணி இருக்கும். ஒரு வண்டி அப்போது தெற்கேயிருந்து வந்து கொண்டிருந்தது. நான் ஒரு பத்திரிகை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைவதற்குள் அந்த வண்டி நின்று ஏறக்குறைய நிறைந்துவிட்டது. அப்பொழுதுதான் அன்று கிண்டி ரேஸ் என்பது நினைவுக்கு வந்தது. வண்டிக்குள் உட்கார்ந்திருந்தவர்களில் அநேகமாய் எல்லாருமே ரேஸ் புத்தகங்களை வைத்துக்கொண்டு குதிரைக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் பலருக்கு அதிர்ஷ்டம் குதிரைக் கொம்பாகத்தான் இருக்கும் என்று நினைத்தபோது சற்று இரக்கமாய் இருந்தது.

நான் ஒரு பெட்டியில் ஏறி காலியாய் இருந்த ஓரிடத்தில் அமர்ந்துகொண்டேன். வண்டி புறப்பட இன்னும் சிறிது நேரமாகும். ஆனால், அதுவரை வெளியே நின்று கொண்டிருந்தால், பிறகு உள்ளே நுழைவதைப் பற்றி ஒரு தடவைக்குப் பத்துத் தடவை யோசிக்க வேண்டியதாகிவிடும். அப்படியே நுழைந்து விட்டாலும், அதன் பிறகு உட்கார்ந்து பயணம் செய்ய ஆசைப்படுவது பைத்தியக்காரத்தனம்.

கையிலிருந்த வார இதழைப் புரட்டிப் பார்த்தேன். ஒன்றும் சுவாரசியமாய் இல்லை. அதைவிட வண்டிக்குள்ளிருந்த ரேஸ் அபிமானிகளின் பாவங்களும் தாபங்களும் படிக்க சுவாரசியமாய் இருக்கும்போல் தோன்றியது.

# முத்திரைக் கவசம்

மாசி மாதத்து வெயில் பிளந்து கட்டியது. உடம்பு வேர்த்துக் கொட்டியது. நான் என் கண்ணாடியைக் கழற்றி விட்டுக் கைகுட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டேன். கண்ணாடி இல்லாத என் கண்களுக்கு மனிதர்கள் மங்கிய நிழல்களாகத் தெரிந்தார்கள். இவர்களில் எத்தனை பிச்சைக்காரர்கள் திரும்பும் போது மகாராஜாக்களாக வரப் போவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறார்களோ? எத்தனை மகாராஜாக்கள் பிச்சைக்காரர்களாகத் திரும்பக் கங்கணம் கட்டிப் புறப்பட்டார்களோ? இரக்கத்திற்குரிய அந்தக் காட்சி சற்று வெறுப்பையும் உண்டு பண்ணியது. வெள்ளைக்காரன் கப்பலேறி விட்டான். அவனுடைய லீலா

படிப்பகம்

www.padippakam.com

வினோதங்கள் பல கப்பலேற மறுத்து இங்கேயே தங்கி விட்டன இந்தியர்களுக்குப் பரந்த உள்ளம். அவற்றை ஸ்வீகரித்துக் கொண்டார்கள். இல்லாமலா இந்தச் சூதாட்டம் இங்கே கொடிகட்டிப் பறக்கிறது? கப்பலேறியவனுக்கு இந்த ஆட்டம் பொழுதுபோக்காய் இருந்திருக்கலாம். ஆனால் இன்று அங்கே போகின்றவர்களில் பல பேருடைய மனைவிமார்கள் தாலிச் சரட்டைக் கூடக் கழற்றிக் கொடுத்து விட்டு அடுப்படியில் உட்கார்ந்திருப்பார்கள். இவர்கள் வாங்கிக் குவிக்கும் டிக்கெட்டுகள் போயல்லவா விறகாய் எரிபட வேண்டும்? சில வாயில்லாக் குதிரைகளிடம் தங்கள் விதியை அடகு வைத்துவிட்டு வர இந்த மனிதர்கள் என்னமாய்ப் பறக்கிறார்கள்! இவர்கள் நம்பும் குதிரைகள் அப்படிப் பறப்பதாகத் தெரியவில்லை.

## /முத்து நிலவு/

அதெல்லாம் சரிதான். ஆனால், அதிர்ஷ்டமடித்தால் யார் வேண்டாம் என்பார்கள்? எனக்குக் கூடச் சபலம்தான். இந்த நாட்டில் எவ்வளவுதான் உழைத்தாலும் கை நிறையச் சம்பாதித்துப் பை நிறையப் போட்டுக்கொள்ள முடியாதபோது ஏழைகள் தங்களையும் தங்கள் சில்லறைகளையும் அதிர்ஷ்டத்துக்குக் காணிக்கையாக்கத் துடிப்பதில் என்ன தவறு?

என்னுடைய கண்ணாடியைச் சட்டைத் தலைப்பில் துடைத்துக் கொண்டேன். பெரியவர்கள் இந்தக் கண்களை ஊனக் கண்கள் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். ஒரு வேளை அவர்கள் ஞானக் கண்கள் அதை உணர்த்தியிருக்க வேண்டும். ஆனால், என்னுடையவையோ ஊனமுற்ற ஊனக் கண்கள். இந்தக் கண்ணாடி தான் எனது ஞானக்கண்கள். இதுபோல மனிதர்களின் ஊனமுற்ற மனக் கண்களுக்கு ஒரு கண்ணாடி மாட்டி விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! எவ்வளவு பளிச்சென்று விஷயங்கள் புலப்படும்! இதில் உள்ள ஒரு சங்கடம் என்னவெனில் அந்த ஞானக் கண்ணாடி கடைவீதியில் விற்கப்படவில்லை. விற்கப்படும் என்பதற்கு ஒரு தடயமும் இல்லை.

நான் என்னுடைய ஞானக் கண்களை மாட்டிக்கொண்டு நிமிர்ந்து பார்ந்தேன். வண்டியிலிருந்த முகங்கள் யாவும் பளிச்சென்று தெரிந்தன. ஒவ்வொரு முகமாக அளந்து கொண்டு வந்த என் கண்களில் அப்போது ஒரு குஷ்டரோகி தென்பட்டான். என்னவோ அவனை விட்டு என் கண்கள் சட்டென்று அகல மறுத்தன. அவன் என்னைக் கவர்ந்து விட்டான் என்றே தோன்றியது. முகத்தைச் சுளிக்கிறீர்களா? நான்கூடத்தான் அவனைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்துக்கொண்டேன். அதற்காக அவன் முகம் என்

படிப்பகம்

www.padippakam.com



னைக் கவரவில்லை என்று எப்படிச் சொல்வது? கவர்ச்சி என்பது அழகுக்கு மட்டும் தானா உண்டு? அசிங்கங்களுக்கும் உண்டு என்பது நீங்கள் அறியாததா? ஆயிரம் பெண்களுக்கு நடுவே ஒருத்தி ஆடையை நழுவ விட்டு விட்டால் நம் கண்கள் அம்பு போல அங்கே பாய்வதில்லையா? அந்தப் பெருநோயாளியும் அது போல்தான் என்னைக் கவர்ந்தான் என்று தோன்றியது.

அவன் என்னைக் கவர்ந்ததற்கு வேறொரு காரணமும் இருந்தது. பெரும்பாலும் இரயிலில் ஏறுகின்ற நோயாளிகள் வாசற்படியிலேயே உட்கார்ந்து கொண்டு ஏறுவோரையும் இறங்குவோரையும் தங்கள் புனித உடலைக் கொண்டு உராய்ந்து சாப விமோசனம் அருள்வது வழக்கம். ஆனால், நான் பார்த்தவனோ அதற்கு முற்றும் புறம்பாக இரயில் பெட்டியின் கடைசியில் நீளமாகப் போடப்பட்டிருக்கும் பெஞ்சின் ஓரத்தில் 'ஜம்' மென்று சாய்ந்து உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தான். நான் கதவுக்கு இப்பால் ஒரு பெஞ்சு விட்டு அவனுக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்திருந்தேன். இரயில்வேக்காரர்களின் கணக்குப்படி அவன் இருந்த பெஞ்சில் ஐந்து பேர் உட்காரவேண்டும் ஆனால், அப்போது பெஞ்சின் மறு கோடியில் ஒரே ஓர் ஆள் மட்டுமே உட்கார்ந்திருந்தார். அவனுக்கு பக்கத்திலோ முன்னாலோ ஒருவரும் அமரவில்லை. திரி விழுந்து வழியும் தலைமுடியும், விகாரமுற்ற முகமும், அதில் ஊசி ஊசியாய் நீட்டிக்கொண்டிருந்த ஐந்தாறு ரோமங்களும், அழுக்கேறிய துணியுமாக ஏதோ மகா சக்கரவர்த்தி என்ற நினைப்பில் அவன் உட்கார்ந்திருப்பது போல் எனக்குப் பட்டது.

இரயில் பெட்டியில் கூட்டம் வழிந்தது. அவசர அவசரமாக ஏறிவந்த எல்லாரும் அவன் உட்கார்ந்துள்ள பெஞ்சு வரை போய், பிறகு முகத்தைச் சுளித்துக்கொண்டு திரும்பினர். அந்த வேகமும் சுளிப்பும் ஒதுங்கலும் எனக்கு வினோதமாய் இருந்தன. அத்தனை பேருக்கும் அவன் அங்கே உட்கார்ந்திருப்பது அருவெறுப்பைக் கொடுத்தது. ஆனால் ஒருத்தராவது அவனை அதட்டிக் கேட்கவேண்டுமே! ஏன்? அவனிடம் வாயைக் கொடுத்துவிட்டுப் பேச்சு வாங்கிக் கட்டிக்கொண்டால் தங்கள் கௌரவம் பின்னப்பட்டு விடுமே என்றா? ஆ! கௌரவம்! அது பாதுகாக்கப்பட வேண்டிய சாதனம்தான். மானிடப் பிறவியின் முத்திரைக் கவசமல்லவா அது? மனிதனின் எல்லா

படிப்பகம்

www.padippakam.com

## மூக்குத்திப் பூக்கள்

என் வீட்டின் உள்ளே
நாணய சப்தம்
வாசல் நிறைய உறவு.

○

புதைப்பார் யாருமில்லை
அழுவார் யாருமில்லை
மனதில் எத்தனை பிணங்கள்!

○

சுவர்கள் எழுப்பினோம்
வீடுகள் ஆகுமென்று
அத்தனையும் சிறைகள்.

○

ஒவ்வொரு வீட்டிலும்
உழைப்பு இனிக்கிறது
கட்டி முடித்த தேன்கூடு.

○

இறுகிய பாறையென்று
ஏளனம் எதற்கு?
சந்நிதியில் கடவுள் சிலை.

**/துறவி/**

---

நாடகங்களுக்கும் சூத்திர தாரியாய் விளங்குவதும் அந்தக் கவசமேயல்லவா? கௌரவம் மனிதனுடைய ஜீவபலம் அதை இழந்து விட மனிதர்கள் தயாராயில்லை. அந்தக் குஷ்டரோகி தன் கௌரவத்தைக் கொண்டே அவர்கள் கௌரவத்தைக் கிழித்தெறிந்து விடுவான் என்ற அச்சமல்லவா அவர்களைக் கட்டிப் போட்டு விட்டது?

அப்போது ஒரு கிழவி கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளாடி நுழைந்து அவனருகே காலியாயிருந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டாள். அவள் பழுத்த கிழம். அவளால் நிற்க முடியாது ஆகவேதான் உட்கார்ந்துவிட்டாள் என்று நினைத்தேன். ஆனால், அங்கே ஒரு பெருநோயாளி கொலு வீற்றிருக்கிறான் என்பது தெரியாமல் போனதாலேயே உட்கார்ந்துவிட்டாள் என்ற விஷயம் பின்னர் தெரிய வந்தது. அவனைத் திருப்பிப் பார்த்ததும் அவள் முகம் போன போக்கைப் பார்க்கவேண்டுமே. 'சர்' ரென்று சருக்கிச்சென்று அடுத்த முனையிலிருந்த ஆளோடு ஒட்டிக்கொண்ட வேகத்தைப் பார்க்க வேண்டுமே! முகமும் உடம்பும் திரிதிரியாய்த் தோல் சுருங்கிப் பார்ப்பதற்கு அவளும் ஒரு நோய் கொண்டவள் போலத்தான் இருந்தாள். அவளுடைய முடிவு காலம் இப்பொழுதோ அப்புறமோ என்றிருந்தது. ஆனால், அவளுக்கெத்தனை வெறுப்பு அவன் மேல்! 'பாட்டி, எமன் கூட குஷ்டரோகியாய்த்தான் வருவான். எப்படிப் போவியோ?' என்று சொல்லிப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது. பாவி, அந்தக் கணமே மண்டையைப் போட்டு விட்டாலும் போட்டு விடுவாள்.

இரயில் புறப்பட்டது. அப்போது உச்சக் குரலில் ஒரு பிச்சைக்காரன் கீத மழை பொழியத் தொடங்கினான். உண்மை

படிப்பகம்

www.padippakam.com



யில் அவன் பாட்டு நன்றாய்த் தான் இருந்ததோ என்னவோ. நான் ஒரு ஞானசூனியம். இன்றைய தமிழ் சினிமாப் பாட்டுகளை எத்தனை பேர் சப்புக் கொட்டிக்கொண்டு ரசிக்கிறார்கள்! எனக்கு ஏனோ காதுக்குள் நீர் புகுந்து விட்டதுபோல் அடைக்கிறது. ஒரு வேளை அவர்கள் காதுக்குத் தேன் புகுந்தது போல் இருக்கலாம். இப்போது அந்தப் பிச்சைக்காரனும் ஒரு தமிழ் சினிமாப்பாட்டுத்தான் பாடிக்கொண்டிருந்தான். நான் அவனைத் திரும்பிப் பார்த்தேன். பிச்சை எடுப்பதற்கும் ஒரு லட்சணம் வேண்டுமே? அவனிடம் அப்படியொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அவனுடைய கைகள் மட்டுமே சற்றுக் குட்டையாய் இருந்தன அவைகளை நீட்டி ஒவ்வொருவராகக் கும்பிடு போட்டுப் பிச்சை கேட்கும் போது, உட்கார்ந்திருப்பவர்களிடம் ஏதோ இரகசியம் பேச நெருங்குவது போல அவனுடைய தலையும் வளைந்து நெருங்கியது. சிலர் அவனுக்குப் பிச்சை போட்டார்கள் பலர் அவனைப் பார்க்கவே இல்லை. அவர்கள் கவனமெல்லாம் கிண்டி ரேஸ் மைதானத்திலும், கண்கள் புத்தகத்திலும், செவிகள் அடுத்தவர்கள் சொல்லும் டிப்ஸிலுமாக இலயித்துக் கிடந்தன. நான் ஒன்றும் பிச்சை போடுவதில்லை. போடவேண்டும்போல எனக்குப் பெரும்பாலும் தோன்றுவதில்லை. அத்துடன் இரயிலுக்கு நான் வாடிக்கைக்காரன். தினமும் பிச்சை போடத் தொடங்கினால் பிறகு நான் இரயிலில் வரவேண்டியிருக்காது.

வண்டி சிறிது தூரம் ஓடியதும் கிழவி நம் நோயாளியை விழித்துப் பார்த்து, ''டிக்கட் வெச்சிருக்கயா?'' என்று கேட்டாள். துணிச்சலான கேள்வி. அவள் வீரமும் கேள்வியின் கெட்டிக்காரத்தனமும் எனக்குப் புல்லரிப்பை உண்டாக்கியது. அவனோ, வெகு அலட்சியமாகத் தன் சட்டைப் பையில் கையை விட்டான். டிக்கட்டைத்தான் எடுத்துக் காட்டப் போகிறான்போல் இருக்கிறது என்று நினைத்தேன். ஆனால், அவனோ ஒரு பத்து பைசா நாணயத்தை எடுத்து அப்போது அந்தக் கிழவியிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பிச்சைகாரனிடம் நீட்டினான்.

அந்த நேரம் பிச்சைக்காரனை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். அவன் பிச்சைக்காரனாகவா இருந்தான்? மணிமகுடத்தை இழந்துவிட்ட சக்கரவர்த்தியைப் போலச் சர்வாங்கமும் கூனிக் குறுகிப் போனான்! அவன் பிச்சைக்காரன்.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால், அவனுடைய கௌரவம் ஒரு ரோகம் பிடித்தவனிடமிருந்து காசு வாங்கிக்கொள்ளக் கூசியது. 'இந்தா' என்னும் பாவனையில் அந்த நோயாளி நீட்டினான் பிச்சைக்காரன் அழுகு குறையாக அசடு வழிய பல்லைக் காட்டி, ''ஆண்டவன் போடற பிச்சை. யார் கொடுத்தாலென்ன? ஆளா முக்கியம்?'' என்று சொல்லிக்கொண்டே வாங்கிக்கொண்டான். பெரு நோயாளி அருள் புன்னகை பூத்தது போல் இருந்தது. கிழவி வாயை மூடிக்கொண்டாள். அவள் கண்களில் தெறித்த அருவெறுப்பில் அப்போது கொஞ்சம் பயமும் சேர்ந்துகொண்டது.



கோட்டை நிலையத்தில் அந்தப் பிச்சைக்காரன் இறங்கிக்கொண்டான். வேறு பெட்டியில் ஏறுகிறானா என்று பார்த்தேன். இல்லை. இறங்கியவன் சுமந்து களைத்தவனைப்போல நடந்து சென்று சிமெண்ட் பெஞ்சில் பொத்தென்று உட்கார்ந்து விட்டான். அவன் கண்களில் கரகரவென்று நீர் சுரந்து விட்டது. அவன் கௌரவத்தை நம் கதாநாயகன் இரத்தக்காயப்படுத்திவிட்டான். அதன் மூலம், 'எனக்கும் கௌரவம் உண்டு. நானும் ஒரு பெரிய மனிதன்,' என்று வாயைத் திறவாமல் நிலைநாட்டி விட்டான். தான் ஒரு கேவலமான நோயாளி என்பதை மறந்துவிட்டவனாகவே தோன்றினான். மனிதர்களில் குட்டை, நெட்டை, கறுப்பு சிவப்பு என்று பேதம் இருப்பதில்லையா? அது போன்ற ஒரு சாதாரண பேதமே அவனுக்கும் மற்றவர்களுக்கும் என்பது போல இருந்தது அவனுடைய பாவனை.

பெஞ்சின் மறுகோடியில் உட்கார்ந்திருந்த கிழவிகூட கோடம்பாக்கத்தில் இறங்கிவிட்டாள். இறங்கும் போது, ''பீடை பொட்டுனு போயிடும்,'' என்று திருவாய்மொழிந்தாள்.

''நீ பாத்துப்போ, ஆயா. பொட்டுன்னு போயிடப் போறே,'' என்று யாரோ விகடம் செய்தார்கள்.

''நான் ஏன்டாப்பா பொட்டுனு போறேன்? ஆண்டு அனுபவிச்ச கட்டை. தேவாளெல்லாம் கொட்டு மேளத்தோட வந்து கூட்டிப்போக மாட்டாளா?'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

இரயில் கிண்டி வந்ததும், எல்லாரும் முண்டியடித்துக்கொண்டு இறங்கினர். நான் பரங்கி மலைக்குப் போக வேண்டியவன். அவசர அவசரமாக எல்லாரும் வெளியேறிக்கொண்டிருந்த போது வாயிற்படியில் உட்கார்ந்திருந்த ஒருவன்- ரேஸுக்குப் போகிறவன்தான்— எழுந்து தன் பையில் கைவிட்டு ஒரு பத்து பைசா நாணயத்தை எடுத்து அந்தக் குஷ்டரோகியின் மடிமீது

படிப்பகம்

www.padippakam.com



போட்டுவிட்டு இறங்கினான். பாவம். குஷ்டரோகியைப் பிச்சைக்காரன் என்று எண்ணியோ, அல்லது அதிர்ஷ்ட தேவதைக்குத் தருமம் செய்ய நினைத்தோ, அவன் அந்தக் காசைப் போட்டிருக்கவேண்டும்.

எதிர்பாராமல் அந்தக் காசு வந்து விழுந்ததும் அந்த நோயாளி அதிர்ந்து போய்ப் பரிதாபமாகப் பார்த்தான். அலங்கோலமாகிச் சீர்குலைந்து போன அந்த முகத்திலும் உணர்ச்சிகள் தெறிக்கக் கூடும் என்பதை அவனை அப்போது பார்த்திருந்தால் விளங்கும். அந்தக் காசைக் கையில் எடுத்துக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்தான். அந்தக் காட்சி மிகவும் பரிதாபமாயிருந்தது. நான் முகத்தைத் திருப்பிக் கொண்டு இரயில் பெட்டியை நோட்டம் விட்டேன். பெட்டியே காலியாகி விட்டிருந்தது. இருந்த ஒரே ஓர் ஆளும் எதிர்ப் பிறத்தில் இருந்த கடைசி பெஞ்சில் நீட்டிப் படுத்துவிட்டான்.

இரயில் புறப்பட்டது. நான் மீண்டும் அந்த நோயாளியைப் பார்த்தேன். அவன் என்னைப் பார்த்தான். இரயில் சீறிக் கொண்டு ஓடியது. அவனிடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாமா என்று தோன்றியது. சற்றுமுன் வரை ஒரு கதா நாயகனுக்குரிய எல்லாத் தகுதிகளோடும் விளங்கி, இப்போது என் முன்னே வெறும் குஷ்டரோகியாக மட்டுமே தேய்ந்து ஒடுங்கி விட்டானே என்று இரக்கமாய் இருந்தது. என்னை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். நான் ஓர் எழுத்தாளன் என்பதால் மனிதர்களைப் படிக்கின்ற வித்தை ஏதோ என்னுடைய பிறப்புரிமைச் சொத்து போல நினைத்திருந்தேன். ஆனால், அவன் என்னைப் பார்த்த பார்வையில் அவனுக்குக்கூட மனிதர்களைப் படிக்க வரும் போல் தோன்றியது. ஆதலால், நான் என் பார்வையை வெளியே திருப்பிக் கொள்ள வேண்டியதாயிற்று.

ஒரு நிமிஷத்திற்கும் பின் கண்களை திருப்பியபோது அவன் என் முன்னே நிற்பதைக் கண்டேன். நான் அடியோடு திகைத்துப் போகும்படி அவன் என்னிடம் பிச்சை வேண்டி கை நீட்டி நின்றான். ஆக, அவன் ஒரு பிச்சைகாரன் தானா?

நான் என் சட்டைப் பையில் கைவிட்டுத் துழாவினேன். ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்று தான் அப்போது என் கையிருப்பு. கண நேர யோசனைக்குப் பிறகு நான் அந்த நோட்டை எடுத்து அவன் கையில் போட்டேன். அவன் இதை எதிர்பார்க்கவில்லை. நான் மட்

படிப்பகம்

www.padippakam.com

டும் என்ன இப்படி நடக்கும் என்றா கண்டேன்? போயும் போயும் ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு ரூபாயைத் தூக்கிக் கொடுத்து விட்டேனே. அவனும் அப்படித்தான் நினைத்தானோ என்னவோ. அப்படியே என் காலடியிலேயே உட்கார்ந்துவிட்டான். உடனே நான் சற்றுத் தள்ளி உட்கார்ந்துகொள்ள நினைத்தேன். ஆனால், என்னைப் பற்றிய அவனுடைய நல்லபிப்பிராயம் அப்படித் தள்ளி உட்கார்ந்து கொண்டால், தள்ளிப் போய் விடுமோ என்று பயமாயிருந்தது. என்னைப் போன்றவர்கள் வளர்த்துக்கொண்டுள்ள மனிதாபிமானம் என்பதே இவ்வளவுதானோ என்று நினைக்கும் போது இன்னும் பயமாயிருந்தது.

அப்போது அவன் கண்களில் கண்ணீர் மல்குவதைக் கண்டு வியந்துபோய், ''என்னய்யா? எதுக்கு அழுறே?'' என்றேன். அவன் என்னைக் கையெடுத்துக் கும்பிட்டு, ''நீங்க மகராஜனா இருக்கணும், சார்,'' என்றான்.

''மகராஜனாத்தானே? இருந்துட்டா போச்சு. ஒரு மனுஷனா இருக்கிறதைவிட அது சுலபந்தாய்யா.''

''நானும் ஒரு காலத்திலே மனுஷனா இருந்தவன்தான், சார். இப்போ இப்படி ஆயிட்டேன்,'' என்றான்.

அவன் ஒரு நோயாளிதான் என்றாலும், என் கண்களில் கூட பீச் இரயில் நிலையத்திலிருந்து கிண்டி வரை ஒரு மனிதனாகவே காட்சியளித்து வந்தான் அல்லவா? அதன் பிறகு தான் அவன் இப்படி ஆகிவிட்டான் என்பது அப்போது என் கணிப்பில் புரிந்தது.

''பீச் ஸ்டேஷன்லே அந்த முண்டையைப் பார்த்தேன், சார்,'' என்றான்.

''யாரை?'' என்றேன் வியந்து போய்.

''என்னை இப்படி நோயாளியா ஆக்கினவளை, சார். நோயாளியா மட்டுமா ஆக்கினா? ஒரு பிச்சைக்காரனாகவும் ஆக்கிட்டா. என் உடம்பிலே புழு வச்ச பிறகும் என்னை அவ விடலே, சார். காரணம், எங்கிட்ட அப்போதும் கொஞ்சம் பணம் இருந்தது. அதையும் கறந்துகிட்டப்புறம் தான் கரும்பாய் இருந்த நான் கசக்கிற வேம்பாய்ப் போயிட்டேன். அந்த முண்டை ஒரு பொடியனோடு இந்தப் பெட்டியிலே பீச் ஸ்டேஷன்லே ஏறினா. அவளுக்கு முன்னால பிச்சைக்காரனா நிக்க அவமானமாயிருந்தது, சார். அதனாலதான் பெஞ்சிலே ஏறி உட்கார்ந்துட்டேன்.''



விஷயம் எனக்கு முற்றும் விளங்கியது.

''அப்படியா? அப்புறம் என்னாச்சு?'' என்றேன்.

''அவ என்னைப் பார்த்ததும் இறங்கி அடுத்த பெட்

படிப்பகம்

www.padippakam.com



டிக்குப் போயிட்டா, சார். உடனே நானும் பெஞ்சை விட்டு எழுந்துக்கலாம்ணு தான் நினைச்சேன். ஆனா, இறங்கிப்போன அந்தக் கழு தையை இந்தப் பெட்டியிலே அப்போ ஏறவந்த இரண்டுபேர் பார்த்த பார்வை! சீ...இந்த மனுஷங்க அவளைவிட எந்த விதத்திலே ஒசத்தின்னு நினைக் கத் தோணிச்சு. அப்படியே உட்கார்ந்துட்டேன். ஆனா, அவுங்க என்னைவிட ஒசத்தி தாங்க, சார். இல்லாமலா இந்தப் பத்து பைசாவை அந்த ஆள் எங்கிட்ட விட்டெறிஞ் சார்? அவுங்க ஒசத்திதான் இல் லையா, சார்?''

அந்தக் காசு வந்து விழுந்த வேகத்தில் அவன் தாழ்ந்து போய் விட்டான். தனக்குத் தானே கழிவிரக்கம் கொண்டு சபித்துக்கொள்ளும்படி அவன் குலைந்து போய் விட்டதைப் பார்க்க எனக்கு வருத்தமாயி ருந்தது.

''மனுஷனிலே என்னய்யா ஒசத்தி தாழ்த்தி?'' என்று அவனுக்கு ஆறுதல் சொன் னேன்.

''அப்படிச் சொல்லிட முடி யாதுங்க, சார். உங்களைப் போன்றவுங்க முன்னாலே நான் பிச்சைக்காரனா நிக்க றது நியாயம். நான் செஞ்ச பாவம் அப்படி. ஆனா, அவளை விட நான் தாழ்த்தினு நினைக்க மனசு இடம் கொடுக் கலியே, சார்.''

ஆக, எல்லா மனிதர்களை யும் போல அவனும் கௌரவம் என்னும் முத்திரைக் கவசம் பூண்ட மனிதன்தான் என்பதை நாசுக்காகச் சொல்லிவிட் டான். இவன் நோயாளியா னால் என்ன? ஒரு பிச்சைக் காரனோ, ஒரு பழுத்த கிழ வியோ அவனைவிடத் தங்களை உயர்வாக நினைத்துக் கொண் டால் என்ன? அந்த ஒருத்தியை விட அவன் தன்னை உயர்வாக நினைக்கிறான். அவளை வெறி யுடன் பார்க்கும் எந்த ஆணை யும் விடத் தன்னை மேலாக எடைபோட்டுக் கொள்கிறான். போதுமே அவன் இன்னும் வாழ்வதற்கு?

இந்த வகை ஜன்மங்களெல் லாம்ஏன் உயிர் வாழ ஆசைப் படுகின்றன என்று எனக்கு ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டே இருந்ததுண்டு. இப்போது நம்பகமான விடை ஒன்று கிடைத்துவிட்டது. ○

படிப்பகம்

www.padippakam.com

## ரசனை

தேவாரம் பாடிய
அப்பர் சுவாமிகள்
திரையில் வந்தார்,
பக்தி ரசத்துடன்.

கொட்டாவிச் சத்தத்தோடு
கூட்டம் கலைந்தது.

விலைமகள் வீட்டில்
பிரசவம் போல
தியேட்டர் அழுதது.

அடுத்து வந்தான்
ஆட்டோ சங்கர்.

கடத்தல், கொள்ளை,
காதல், கற்புக்குலைவு...

பந்திகள் மூன்றிலும்
குந்தி எழுந்த
கூட்டமே மீண்டும்
முட்டி மோத,

தியேட்டரில் கூட்டம்
அலை மோதுகிறது.

## விமர்சகர்

''நடப்பது இப்படித்தான்''
என்று நமக்கெல்லாம்
சொல்லிக் கொடுக்கும்
ஆசான்!
பாவம், அவர் ஒரு நொண்டி.

## மௌன கீதங்கள்

உள்ளத்தின் உணர்ச்சிகள்
வார்த்தைகள் இல்லாத
மௌன புஷ்பங்கள்.



பருவத்தின் சிலிர்ப்புகள்
பார்வையின் பரிமாறல்கள்
புரியாத புதிர்க்கதைகள்!
வாலிப எண்ணங்கள்
வசந்த ஸ்பரிசங்கள்
சொல்லத் தெரியாத
ஊமையின் ஜாடைகள்!
மனதின் வண்ணங்கள்
மங்கையின் நினைவுகள்
சுருதி சேர்க்கும்
ஒற்றைத் தந்தியின்
சுண்டும் நாதங்கள்!

இளமைக் கனவுகள்
இதயத் துடிப்புகள்
வார்த்தைகள் இல்லா
மௌன கீதங்கள்!

**குடந்தை பரிபூரணன்**

படிப்பகம்

www.padippakam.com



# நெருப்பை விழுங்கும் மயில் குலம்

இது தனக்குச் சம்பந்தம் இல்லாதது. அடுத்த செக்ஷன் விவகாரம். இருந்தும் கண்ணெதிரில் நடந்து கொண்டிருப்பதை ஒதுக்கிக் கொள்வது அவ்வளவு எளிதாக இல்லை. தனக்குள்ளே ஏதேதோ பொங்கிக் கொட்டுவதை தம்புராஜால் உணர முடிந்தது.

கால் மேல் கால் போட்டுக் கொண்டு தான் பத்திரிகையில் படித்த நகைச்சுவைத் துணுக்கு ஒன்றை டைப்பிஸ்ட்களின் செக்ஷனில் உட்கார்ந்து கொண்டு மோகனா சிரித்துச் சிரித்துச் சொல்லிக் கொண்டு இருக்கிறாள். கைகளை ஆட்டி, முகத்தில் பலவித பாவங்களைக் காட்டி, குரலின் ஸ்தாயியை ஏற்றி இறக்கி, ஒரு சினிமாக் கதாநாயகியாக தன்னைப் பாவித்துக் கொண்டு அவள் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஆஃபீஸ் என்ற நினைப்பே இல்லாமல், வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து அரட்டை அடிப்பது போன்ற மன நிலையே அவளுக்கு இருக்கிறது.

அவளை அவனால் கண்டிக்க முடியும்; வாயை மூடச் செய்ய முடியும்; அந்த இடத்தை விட்டு எழுந்து போக வைக்க முடியும். ஆனால் இவை எல்லாவற்றையும்

/என்.ஆர். தாசன்/

செய்யும் பொறுப்பில் உள்ள அவளுடைய செக்ஷன் சூப்ரண்டே இரண்டு கைகளையும் காதுகளின் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஃபைலில் கண்களைப் பதித்துக் கொண்டு, 'நான் எதையும் கேட்க மாட்டேன்; எதையும் பேச மாட்டேன்' என்றிருக்கும் போது அவனுக்கு மட்டும் என்ன வந்தது?

ஒரு செக்ஷன் சூப்ரண்டிற்கு வேறு எந்தத் தகுதி இல்லாவிட்டாலும், ஒரு தகுதி நிச்சயம் இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் அடித்து அடித்துச் சொல்லி இருக்கிறார்கள். தன் கீழ் வேலை செய்பவர்களை அடக்கவும், கட்டுப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். தங்களுக்கான 'பெர்சனல் ஃபைலை' அதிகாரிகள் எழுதும் போது இது குறித்து ஒரு கேள்வியும் உண்டு. "ஹாஸ் ஹி காட் இஃபெக்டிவ் கண்ட்ரோல் ஓவர்

படிப்பகம்

www.padippakam.com

## மூக்குத்திப் பூக்கள்

இலைகள் என்று
ஏளனம் வேண்டாம்;
பூஜை அறையில் துளசி.

○

'பற்றுகள் அறுப்பீர்'
துறவியின் உபதேசம்
விரல் நிறைய மோதிரம்.

○

கிழிந்த சட்டைதான்
கேலி வேண்டாம்
பை நிறைய பணம்.

○

ஓடங்கள் கவிழ்த்த அலைகளே
அங்கே பார்த்தீர்களா
கப்பல் போகும் கம்பீரம்.

○

விழுந்து நொறுங்கியது
முகம் பார்க்கும் கண்ணாடி
எத்தனை முகங்கள் தரையில்!

**/துறவி/**

ஹிஸ் சபார்டினேட்ஸ்?'' அந்த செக்ஷன் சூப்ரண்ட்டிற்கு இதெல்லாம் தெரிந்திருக்கவே செய்யும். அவர் ஆரம்பத்தில் இந்த முயற்சியில் ஈடுபட்டு, தோல்வியுற்றதால், குறைந்த பட்சம் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்தில்தான் இந்த ஒதுக்கமும் பாராமுகமும் காட்ட வேண்டும். அவரிடம் இது பற்றிக் கூறினால் என்ன பதில் சொல்லுவார்?

''சே...அது பொண்ணா .. பொலிகாளே. கோயில்மாடு ''

இப்படி அவர் அபிப்பிராயம் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை தம்புராஜ் அறிவான்.

ஆறு ஏழு மாதங்களுக்கு முன் வெளியூரிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி மோகனா வந்ததிலிருந்து அவளைக் கவனித்து வருகிறான். தனது கணவன் சென்னையில் வேலை செய்கிற காரணத்தால் தனக்கும் மாறுதல் தர வேண்டும் என்று அவள் கொடுத்த மனு முதலில் 'இடமில்லை' என்று நிராகரிக்கப்பட்டு, பின் ஒரு எம். எல். ஏ யின் பலமான சிபார்சும் நிர்ப்பந்தமும் வந்த போது இல்லாத இடம் திடீரென முளைத்துக் கொண்டது

யாரும் தனக்கு முக்கியமில்லை என்பது போல் தலையை நிமிர்த்தி, கைகளை வீசிக் கொண்டு அவள் வருவாள். மாடிப் படிகளிலும், வராந்தாவிலும் நடந்து வரும் போது எதிரில் எந்த ஆண் வந்தாலும் விலகாமல், ஒதுங்காமல், வழிவிடாமல்தான் வருவாள். விலகுதல், ஒதுங்குதல், வழி விடுதல் எல்லாம் எதிரில் வருகிறவர்களின் வேலை என்பது அவள் எண்ணமாக இருக்கக்கூடும். கம்பத்துக் கொடி போல் பறந்து படபடக்கும் முந்தானை யார் மீதும் படுவது பற்றியோ யாரும் தன் மீது மோதி இடித்துக் கொண்டு போவது பற்றியோ அவள் கவலைப் படுவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



தினம் ஆஃபீஸ் நேரம் தவறி வந்துதான் அட்டண்டன்ஸ் ரிஜிஸ்டரில் அவள் கையெழுத்துப் போடுவாள். 'கிரேஸ் டைம்'மைப் பயன்படுத்தாமல் அவள் ஆஃபீஸ் வந்து அவன் பார்த்ததில்லை. வந்ததும் ஃபேனை உச்சத்தில் சுழல விட்டுக் கொண்டு, தலையை நிமிர்த்தியும், தாழ்த்தியும் வியர்வையைக் காய வைப்பாள். பிறகு காஃபிக்குக் கிளம்பி விடுவாள். காஃபி குடித்து விட்டு மரத்தடிகளில் போட்டிருக்கும் கடைகளை எல்லாம் வேடிக்கை பார்த்து விட்டு அரை மணி நேரம் கழித்துத்தான் இடத்திற்கு வருவாள்.

ஃபைல்களை வேண்டா வெறுப்புடன் புரட்டிக் கொண்டே இருப்பாள். அந்தப் பக்கமாக யாரேனும் பெண்கள் சென்றால் அவர்களை வலிய அழைத்து ஸ்டூலில் கட்டாயப் படுத்தி உட்காரச் சொல்வாள்.

'ஐயோ, எனக்கு வேலை தலெக்கு மேல இருக்கு' என்று அவர்கள் கூறினால், ''அச்சச்சோ, தலைக்குமேலெ முடி இருக்குன்னுல்ல நெனச்சேன். வேலெயா இருக்குது?'' என்று சொல்லிவிட்டு கெக்கெக்கே எனச் சிரிப்பாள். சிரிப்பு அடங்கியதும் உரத்த குரலில் கேட்பாள்:

''இன்னெக்கி என்னடி டிஃபன்?''

''தயிர் சாதம்...''

''ஐயே... தெனம் தயிர் சோறு தானா? ஒரு நாளெக்காவது சிக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி கொண்டு வரக் கூடாதா?...''

அது நான்கு செக்ஷன் தாண்டி உள்ளவர்களுக்கும் கேட்கும்.

''சரியான தின்னி மூதேவி'' என்று தம்புராஜ் மனதில் கருவிக் கொள்வான்.

அவள் ஃபைல்கள் போடும் முறையை அவளுடைய செக்ஷன் சூப்ரண்ட் சொல்லிக் கேட்டிருக்கிறான். எந்த ஃபைலையும் நுணுக்கமாகப் பரிசிலனை செய்து, காரண காரியங்களுடன் விஷயத்தை விளக்கி ஆதாரங்களைச் சுட்டிக் காட்டி 'நோட்'டுகளோ, ட்ராஃப்ட்டுகளோ வைக்க மாட்டாள். நாலைந்து பக்கங்களில் வைக்க வேண்டிய 'நோட்'களை நாலே வரிகளில் எழுதிப் போட்டு விடுவாள். செக்ஷன் சூப்ரண்ட் தலையில் அடித்துக் கொள்ளாத குறையாகக் கேட்பார்.

''இப்படி 'ஃபால்ட் நோட்டா' போட்டா எப்படி?''

அந்தக் கேள்வியில் தனது திறமையின்மை வெளிப் பட்

www.padippakam.com

## ஹைக்கூத்திப் பூக்கள்

முயன்று முயன்று
திரியைத் தூண்டிவிட்டேன்
விளக்கின் கீழே இருட்டு.

○

நூலுக்கும் தறிக்கும் பகை
காதில் விழுகிறது
நிர்வாணத்தின் அழுகை.

○

புனிதமான புன்னகை
பூவின் இதழ்களில்
ஆசீர்வதிக்கும் சூரியன்.

○

இருண்டு கிடக்கும் பாதையில்
தனியே போகும் மனிதன்
வெளிச்சமாகும் நினைவுகள்.

○

வெளவாலின் அழுகை
பழுக்காத மரம் பார்த்து
வேரடியில் பூக்கள்.

/துறவி/

---

டதை நினைத்து வருந்துவதோ, தயக்கம் காட்டி தலையைச் சொரிவதோ, வெட்கத்தில் மன்னிப்புக் கோருவது போன்ற முகபாவம் சொள்வதோ அவளுக்கு வழக்கமில்லை. தலை நிமிர்ந்து, தனது உரிமையை நிலைநாட்டிக் கொள்கிற மாதிரி சொல்வாள்.

''எனக்குத் தெரிஞ்சதெ எழுதிப் போட்டிருக்கேன் சார்...''

பேச்சை வளர்க்க விரும்பாத அந்த சூப்ரண்ட் தலையை இடது கையில் சாய்த்துக் கொண்டு, மௌனயாகி விடுவார். ஆனால் தம்புராஜ்ற்குத்தான் . உள்ளுக்குள்ளே புகையும்.

''ஒங்களுக்குத் தெரிஞ்சதே எழுதிப் போட்றதுக்கு இது என்ன நர்சரி ஸ்கூலா? இந்த சீட்டிற்குரிய எல்லா விஷயங்களையும் நீங்க தெரிஞ்சிருக்கனும்... ஆயிரமும், ஆயிரத்து ஐநூறுமா வாங்குறீங்களே, அது இதுக்குத்தான். தர்ம வேலெ செய்யிறதா நெனக்க வேணாம்...'' என்று சொல்லத் தோன்றும்.

அந்த செக்ஷன் சூப்ரண்டிடம் சொல்லாமல் விட்டதை டைபிஸ்ட் செக்ஷனில் நின்று அவள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''இவருக்குத் தெரிஞ்சதெ எழுதட்டுமே. இவரு எதுக்கிருக்காரு?...''

திரும்பவும் தம்புராஜ் அந்த செக்ஷன் சூப்ரண்டிடம் கூடு பாய்ந்துகொண்டான்.

''எதுக்கிருக்கனா? ஒங்களுக்கு 'கிளாஸ்' நடத்துறதுக்காக நான் இல்லே. ஒங்க வேலெயெ என் வேலெயா தலையில் போட்டுக்கிட்டு செய்யவும் நான் இல்லே. நான் எதுக்கு இருக்கேன் தெரியுமா?''

அந்த நிறுத்தத்தில் அவள் முகம் எப்படி இருக்கும் என்று நினைவில் வரைந்து கொள்வான்.

''ஒங்க வேலெயெ சூப்பர்வைஸ் பண்ணத்தான் இருக்

படிப்பகம்

www.padippakam.com



கேன். எனக்குத் தெஞ்ரிசதெ எழுதச் சொன்னிங்கள்ல... தெரிஞ்சது இந்த வேலெ மட்டுமில்லே. இன்னொன்னும் இருக்கும். ஒவ்வொரு ஃபைலிலும் ஒங்க ஸ்லிப் ஷாட் ஒர்க்கையும் கேர்லஸ்னஸையும், டிலேயையும் குறிச்சு குறிச்சி வச்சா எந்தக் குருட்டு ஆஃபீஸரும் பாக்காமல் சும்மா இருந்திர மாட்டான்...''

அதன் விளைவு எந்தவிதமாக இருக்கும்?

விளக்கம் கேட்கப்படும்; ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்; ஒரு சென்ஷ்யூரோ, இன்கிரிமெண்ட் நிறுத்தமோ, ரிவர்ஷனோ, ஏன் சஸ்பென்ஷன் வரைகூடப் போகலாம். இவையெல்லாம் இவளுக்குத் தெரிந்திருக்காதோ?

அவளின் போக்கைப்பற்றிக் குறிப்பிட்டு அந்த சூப்ரண்டிடம் ஒரு முறை தம்புராஜ் கோபமாகக் கேட்டான்.

''ஏன் இப்படி ஏனோ தானோன்னு நடத்துக்கிறிய? அசிங்கம் ஒங்களுக்கு மட்டுமல்ல எல்லா சூப்ரண்டுகளுக்கும்தான். யுவர் பிரசன்ஸ் சுட்பி ஃபெல்ட்...'' அதற்கு அவர் நிதானமாக பதில் சொன்னார்.

''ஆஃபீஸ் என்ன நம்ம தலையிலயா ஓடிக்கிட்டிருக்கு? பி.ஏ.ட்ட 'இதெ மாத்துங்க சார்'னா 'ஒரு பொம்பளப் புள்ளெயக்கூட கண்ட்ரோல் பண்ண முடியலன்னா என்ன சூப்ரண்ட் உத்யோகம் பார்க்கிறீங்கங்கிறார். சரின்னு கொஞ்சம் சொல்லிப் பார்த்தா இது எகிறிக் குதிக்குது. இதெ பி ஏ.ட்டசொன்னா அட்ஜஸ்ட் பண்ணிப் போங்க சார்னு,அதே நாக்கு சொல்லுது. நம்ம ஸ்டாபையோ கேக்கவேணாம். சுத்தி நிண்டு வேடிக்கெ பாக்குறாங்க. 'சாரு இன்னெக்கு செமத்தியா வாங்கிக் கட்டிக்கிட்டார்'னு கிண்டல் வேறே.''

அவனது தர்மசங்கடம் தம்புராஜை மௌனப் படுத்தியது. வழக்கத்திற்கு மாறாக காஃபிக்குச் செல்லும் போது சரோஜாவும் ஜானகியும் தனது செக்ஷனைச் சுற்றிக்கொண்டு செல்வதை தம்புராஜ் கவனித்தான். அவனது கவனிப்பிற்குக் காத்திருந்தது போல சரோஜா புன்னகை செய்தாள். மோகனாவை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினாள் சரோஜா. பிறகு ரகசியம் போல் கூறினாள்.

''இவளுக்கெல்லாம் ஒங்க மாதிரி சூப்ரண்ட் போடனும் சார். பயமே இல்லெ சார் இவளுக்கு. என்ன சார் பொம்பளை இவ...'' என்று அவள் கூறிக் கொண்டிருக்கும்போதே, ஜானகி குறுக்கிட்டாள்.

''நமக்கெல்லாம் ஒருத்தர்

படிப்பகம்

www.padippakam.com

ஒன்னு சொல்லிருவாங்களோன்னு பயமா இருக்கு... இவ என்னடான்னா...''

இவர்கள் இருவருமே தம்புராஜின் செக்ஷனில் வேலை செய்திருக்கிறார்கள். நியாயமோ, காரணமோ இல்லாமல் தவறுகள் செய்யப்படும் போது அவர்களை அவன் கண்டித்திருக்கிறான். பொறுப்பின்மையும், ஒழுங்கு மீறல்களும் அவனால் சகித்துக் கொள்ளப் படுவதில்லை. இந்த அடிப்படையில் இரண்டொரு கடுமையான வார்த்தைகள் தன்னால் சொல்லப் பட்ட போது இவர்கள் அவற்றை எப்படி எதிர் கொண்டார்கள்? முறைத்து, முகம் தூக்கி, சிற்சில சமயங்களில் கண்களை நனைத்தும் பிரதிபலிப்புக் காட்டவில்லையா?

''அப்பா ...பயங்கரம்...டெர்ரர்...அவர்ட்ட மனுஷி வேலெ செய்ய மாட்டா'' என்று அவர்கள் பஸ் ஸ்டாண்டிலும், காண்டீனிலும் பேசியவை அவன் காதுக்கு வராமல் போனதில்லை.

இது ஏன்?

அனுபவிப்பது அவர்களாக இருந்ததாலா?

தான் வெறுத்து ஒதுக்கி, தன் நகத்தைக் கூடத் தீண்டக் கூடாதென விரும்பும் கடுமை.

பிறர் நெஞ்சில் நின்று குதியாட்டம் போட வேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்களா?

அல்லது பாரபட்சமற்ற நியாயமான, ஒரேயடியாக நசுக்க நினைக்காத கடுமை, உணர்ச்சி வடிந்து சமனப்பட்டு நிதானம் நிறைந்த நிமிஷத்தில் சரியென்று தோன்றுகிறதோ?

''கடுமையானவங்க கிட்ட பொதுவாகவே பெண்கள் மரியாதெ காட்றவங்களாவே இருப்பாங்களோ?'' தம்புராஜ் இவர்கள் இருவரும் தன் செக்ஷனில் இருந்த நாட்களை நினைவுபடுத்திப் பார்த்தான்.

அப்படி ஒன்றும் இவர்கள் கெட்டிக்காரர்களோ, திறமைசாலிகளோ அல்ல. பல வருஷங்கள் 'அக்கௌண்ட்' செக்ஷனிலேயே இருந்து புள்ளி குத்திக் கொண்டிருந்ததால் 'கரெஸ்பான்டன்ஸ்' செக்ஷனுக்குப் பொருத்தமற்றவர்களாகப் போய் விட்டார்கள். ஆயினும் இவர்களிடம் உள்ள 'சின்சியரிட்டி' அவனுக்குப் பிடிக்கும். ஃபைலை தாமதம் செய்ய மாட்டார்கள். சீனியர் அசிஸ்டண்ட்களின் பக்கத்தில் உட்கார்ந்து அவர்களிடம் 'டிக்டேஷன்' வாங்கிக் கொள்வார்கள். ஐந்து மணிக்கு மேல் ஆஃபீஸ் முடிந்தபின்புகூட உட்கார்ந்து அவர்களிடம் பெரிய நோட்களை எழுதி வாங்கி, டைப்படித்துப் போட்டு விடுவார்கள். அந்த சீனியர் அசிஸ்டண்ட்களும் முகம் சுளிக்காமல் உதவி செய்வார்கள். அப்போதப்போது ஐம்பதோ, நூறோ வட்டி இல்லாமல் இவர்களிடம் கடன் வாங்கிக் கொள்வதற்கு நன்றி செலுத்துகிற காரியமாகக் கூட இது இருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



''கொஞ்சம் திறமையா இருக்கிறவங்ககிட்ட எல்லாம் ஏன் தரித்திரமும் கூடவே வந்திருது?''

செக்ஷனை விட்டு நகரும் போது சரோஜா திரும்பவும் கூறினாள்.

''என்ன சார், பொம்பளை இவ ..''

மோகனாவை சம்பந்தப் படுத்தி தனக்குக் கொம்பு சீவி விட சரோஜா முயல்வதற்கு வேறொரு விஷயம் இருப்பதாக தம்புராஜிற்குத் தோன்றியது. இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த அந்தப் புடவை விவகாரம் அவள் பேச்சின் பின்னே நின்று எட்டிப் பார்ப்பதை அவன் கவனிக்கவே செய்தான்.

தவணைக் கடனில் மோகனாவுக்காகப் புடவை வாங்கி வந்திருக்கிறாள் சரோஜா. அவளுக்குப் பிடிக்கவில்லை திருப்பிக் கொடுத்திருக்கிறாள். 'டிராயரிலேயே இருக்கட்டும். வீட்டிற்குப் போகும் போது எடுத்துக்கிறேன்'' என்று சரோஜா சொல்லி இருக்கிறாள். இருவருமே மறந்து போக இடையில் ஞாயிற்றுக் கிழமை குறுக்கிட, திங்கட் கிழமை வந்து பார்க்கும்போது அது அங்கிருப்பதற்கு இது என்ன ராமராஜ்யமா?

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒன்ட்ட சேலெயெ குடுத்துட்டேன். பணத்தைத் தர வேண்டியது நீதான்'' என்றாள் சரோஜா.

''நான்தான் பிடிக்கலன்னு சொல்லி எடுத்துட்டுப் போன்னேனே. போகாதது ஒன் தப்பு'' என்றாள் மோகனா.

''வேணான்னா, என் கையில் கொடுக்குறதுதானே?''

''டிராயர்ல வைன்னு எந்த வாய் சொல்லுச்சு?''

''நீ வச்சிட்டுப் போனேன்னு எப்படி நம்புறது?''

''எனக்குப் பின்னால் நீதான் ஆஃபீசெ விட்டுப் போனே. நீயே ஏன் எடுத்திட்டுப் போயிருக்கக் கூடாது?''

பிறகு வார்த்தையில் நெடி ஏறி, ஆஃபீஸ் என்ற நினைப்பு மறந்து, சேரி மனோபாவம் இருவரையும் தொற்றிக் கொண்டது.

''சேலெயே மரியாதையா திருப்பிக் கொடுக்கலே ஒன்னோட இடுப்புலே சேலெ இருக்காது'' என்று சரோஜா எச்சரித்தாள். மோகனா இதற்கு சளைத்தவளா?

''பாவாடையோட நிக்கப் போறது நீயா, நானான்னு அப்பறம் தெரியும்...''

'அந்தக் காட்சி'களைக் காண ஏங்கியவர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்து விட்டு இருவரின் எச்சரிக்கைகளும் வெற்

படிப்பகம

www.padippakam.com

றுக் கூச்சலில் முடிந்து விட்டன.

புடவையை இழந்த சரோஜா இப்படி மோகனாவைப் பற்றிப் பேசிப் பேசி ஆறுதல் தேடிக் கொள்கிறாள்.

ஆயினும்...

''இவள எல்லாம் ஒங்க மாதிரி சூப்ரண்ட்ட...'' என்று சரோஜா கூறி விட்டுச் சென்றது மயக்கிக் கொண்டிருக்கிறது....

மோகனா டெஸ்பாச்சிங் செக்ஷனில் உட்கார்ந்து பலத்த குரலில் பேசிக் கொண்டிருந்தாள். வழக்கம் போலவே அது ஆஃபீஸ் விஷயமாக இல்லை. சினிமா பற்றியோ, பத்திரிகையில் படித்த கதை பற்றியோ இருந்தது. ஆழ்ந்து, நுணுகிப் பார்க்க வேண்டிய ரிட் மனு சம்பந்தமான ஃபைலை தம்புராஜ் பார்த்துக் கொண்டிருந்தான். அவளின் பேச்சும், சிரிப்பும் அதில் ஆழ்ந்து ஈடுபடுவதற்கு இடைஞ்சலாக இருந்தன. இருந்தும் பொறுத்துக் கொண்டான். ஆனால், பொறுமை எல்லை கடந்தபோது உச்சக்குரல் எடுத்துக் கத்தினான்.

''மோகனா, இது என்ன ஆஃபீசா? இல்லே, சந்தைக் கடையா? சீட்டுக்குப் போங்க. ஐ சே கோ டு யுவர் சீட்...''

தனது கட்டளைக்குப் பணியாது போனால், எதிர்த்து வார்த்தை யாடினால், தான் என்ன செய்ய வேண்டும், எதை எதைச் சொல்ல வேண்டும், என்று நினைவு பரபரத்துக் கொண்டிருந்த போது...

எதற்குமே வேலை வைக்காமல், கல்லடிபட்ட பறவை போல் படபடப்புடன் எழுந்து, நடையை ஓட்டமாக்கி, நாற்காலியில் போய் விழுந்தாள்.

தம்புராஜுக்கு இது வியப்பாக இருந்தது.

சிறிது தூரத்தில் நின்றபடி தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த சரோஜாவின் முகத்தில் திருப்தி தெரிந்தது. பழிவாங்கி விட்டதால் மட்டுமல்ல, சற்றுமுன் தன்னிடம் அவள் சொன்னது நிரூபணமாகி விட்டது என்பதனால் ஏற்பட்டதோ?

''கடுமையானவங்க கிட்ட பெண்கள்...'' என்பதா இதன் அர்த்தம்?

நியாயமான கண்டிப்பும், காரணத்தோடு கூடிய கடுமையும், எந்த முரட்டுப் பெண்ணையும் வசியப்படுத்துமோ?

அப்படியானால் நியாயமும், காரணமும் இதுவரை இல்லாததாலேயே இவள்...

தன் போக்கில் பாடிக் கொண்டிருந்த கிளைப் பறவை ஒன்றைத் தனது வீர சாகசம் புலப்பட வதைத்து விட்டது போலிருந்தது அவனுக்கு. ஒரு வெற்றியினாலான குதூகலத்திற்குப் பதில், தோல்வியினாலான துக்கமே எண்ணெய்ப் பிசுக்காய்க் கசகசத்தது. ○

படிப்பகம்

www.padippakam.com



# அவரவர் தேசம்

''மனுசனுகளா இவனுக?''

கண்களில் நீர் முட்ட இவனுச்குள் ஒரு குமுறல் கிளர்ந்தது. கூட்ட நெரிசலில் இவனுடைய கால் மிதிபட வலி ஒய்ந்ததாய்க் காணோம் சகித்துக் கொண்டு இலேசாய்த் திமிறியபடி நிற்க, முகத்தில் பட்ட மூச்சுக் காற்று குமட்டுவதாயிருந்தது. கையை ஒரு வழியாய் வெளியே இழுத்து, உயர்த்தி, கம்பியைப் பற்றிக் கொண்ட போது, வலது கை வலி இழந்தது. வர வர இவன் சம்பந்தப் படுகிற எதுவுமே எரிச்சலூட்டுவதாயிருந்தது.

சவூதியிலிருந்து வந்த புதிதில் ஒவ்வொன்றும் எளிதில் பிடிபடுகிற மாதிரியில்லை. எவருடனும் ஒட்டுதல் என்பது சிரமத்தைத் தருவதா யிருந்தது. பனி விலகலுக்குப்பின் தெரிகிற தோற்றமாய் அவைகள் இவனுக்குப் பட்டன.

வேறு மண்ணில் கழிந்த ஐந்து வருட அனுபவங்கள் ஒரு நெடிய கனவுமாதிரி வந்து போகின்றன. கூடுதலாய்ச் சம்பாதித்ததில், காலம் கழிந்த வேகம் தெரியவில்லை. பஸ்ஸில் பயணம் செய்கிற அனுபவம் கூட இன்னமும் பிடிபடவில்லை. ஒவ்வொன்றும் மாறிப் போய் விட்டதாகவே நினைக்க வேண்டியிருந்தது இவனால்.

விசாலமான பாதைகளில், ஒவ்வொன்றுக்கும் ட்ராக் போடப்பட்டிருந்ததைநினைக்க இவனின் பயண அனுபவங்கள் பெருமூச்சு விடச் செய்தன. ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட கார்களில் பயணம் போன இவனுக்கு இன்றைய அனுபவம் கசப்பூட்டுவதாயிருந்தது. தான் ஏதோ ஒரு குழிக்குள் நிராதரவாய் வீசப்பட்டு விட்டது போலிருந்தது.

பஸ்ஸுக்குள் கூட்டம் அலையாடிக் கண்டக்டரின் இருப்பிடத்தை மறைத்தது. அவனுடைய தீனமான குரல் இவனுக்குள் கசிவைச் சாத்தியமாக்கியது. அந்நியத் தன்மையோடு சவூதியில் வாழ்ந்த நாட்களை நினைக்க, இன்றைய அனுபவம் ஆறுதலாயிருந்தது. சாலையோரங்களில், பெங்கு வின் பறவையைப் போல நடை போட்ட மனிதர்களை நினைக் கச் சிரிப்பு வந்தது. பேரீச்ச மரத்தடியில் கேட்பாரில்லாமல் சிதறிக் கிடந்த பழத்தை எடுத் துச் சாப்பிட்டபடி வெம்மை யைச் சகித்து நடந்த நாட்க ளும் இவனுக்கு நினைவுவரும் பஸ்ஸே இல்லாத நகரத்தில் நவீனமான கார்கள் போய்வ

www.padippakam.com

வதைக் கவனிக்கையில் சர்க்கஸ் நடப்பதாய்த் தோன்றும் இவனுக்கு என்ன விலை கொடுத்தாலும் மதுவையோ, பெண்ணையோ அனுபவிக்க முடியாத நிலைமை வாழ்க்கையை அவலப்படுத்துவது போலத் தோன்றும்.

அடிக்கடி சட்டைப்பாக்கெட்டைத் தொட்டுப் பார்க்க வேண்டிய நிலையை அனுபவிப்பது இவனுக்கு வெட்கமாயிருந்தது முந்திய தினத்தில் அவசரமாய் பஸ்ஸில் தாவி ஏறுகையில், மடிப்பு விழாத நூறு ரூபாயை இழந்த வருத்தம் இன்னமும் நீங்கவில்லை.

ஆயிரக் கணக்கான மைல் தொலைவில் தனியே வாழ்ந்த நாளில் இவன் எதையும் தொலைத்ததாய் நினைவில்லை. இவனுடைய சமீபத்திய அனுபவம், பயணம் செய்வதிலிருக்கிற பீதியை உணர வைப்பதா யிருக்கிறது.

சிவகுருவிடம் இதுபற்றிச் சொல்ல வேண்டுமென நினைத்தான் இவன். அவன், வெகுவாய் மாறிப் போயிருந்ததில், இவனுக்கும் கூடுதலாய் ஆச்சரியமிருந்தது. அவன் இன்னமும் ஒரு வேலையில் ஒழுங்காய் அமராததில் இவனுக்கு வருத்தம். நிறையப் படிப்பதும் பேசுவதுமாகவே அவனின் பொழுதுகள் கழிவதைப் பார்க்கச் சங்கடமாக இருந்தது. குழிந்த கண்களோடு அவன் எதையும் கூர்ந்து கவனிப்பதும், இலேசாய்க் கரிபடிந்த முகத்தில் தேங்கியிருக்கிற ஏக்கமும் பார்க்க பரிதாபமாக இருந்தது. சவூதியில், இவன் அனுபவித்ததையெல்லாம் சொல்லும் போது நிதானமாய்க் கேட்கிறான். கடைசியில் அதைப் பற்றிப் பெருமையாகக் கருத்துச் சொல்வதில் ஆர்வமிருந்தது. அதைக் கேட்கையில் இவனுக்கு ஆச்சரியம் கூடும்,

உறுமலுடன் குலுங்கி, ஓரமாய் ஒதுங்கிய பஸ்ஸிலிருந்து ஆட்கள் பிதுங்கி இறங்குவதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. வெள்ளிக் கிழமைகளில் சவூதியை விட்டுத் தொலைதூர நகரங்களுக்குப் போய் வருவதுண்டு. பஸ்ஸே இல்லாத அளவுக்கு சவூதி பணக்கார நாடாக இருப்பதில் இவனுக்கு வியப்பு ஈரமில்லாத நிலத்தில் மரங்களைப் பார்ப்பது சாத்தியமில்லை. பசுமையைக் காணாமல் பரந்த மணல் பரப்பில் வெறுமையை வெரித்தபடி தாய்நாட்டின் நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்த நாட்களைப் பற்றியும் நினைத்துக் கொள்வான். சன்னலைத் திறந்து வைத்து மௌனமாய் ஓடும் கார்களை வேடிக்கை பார்ப்பதில், முன் இரவின் நேரங்கள் கழியும். வானத்து நட்சத்திரங்களின் நிலைகள் மாறுவதைக் கவனிப்பதிலும் இவனுக்கு ஆர்வம் உண்டு.

ஆரவாரம் குறைந்து கொண்டிருந்த பகுதியில் பஸ் ஓடிக் கொண்டிருக்கையில் இவனுக்கு மூச்சு விடுவதில் சௌகரி

www.padippakam.com



யமிருந்தது. சாலையோரங்களில் மின்விளக்குகளின் வெளிச்சம கூடுதலாகி வந்த போது நடமாட்டம் படிபடிப்யாகக் குறைந்து வருவதைக் கவனித்தான். இடது பக்கத்தில் அமர்ந்திருந்த கிழவர் நிதானமாய் எழுந்து நகர, இவனுக்கு இடம் கிடைத்தது.

சவூதியிலிருந்த பொழுது, நிறைய வீடியோ பார்க்கிற வாய்ப்பு இருந்தது. மிகுந்த பாதுகாப்போடு இவன் பராமரித்த வீடியோவையும் டெக்கையும் குறைந்த விலைக்கு விற்றதில், வருத்தம் இவனுக்கு. காஸட்டுகளில் சிலதை மட்டும் எடுத்து வந்திருந்தான். கள்ளத்தனமாய் வாங்கிப் போட்டுப் பார்த்த அந்தக் காஸட்டை எடுத்து வர முடியாததில் இவனுக்கு கூடுதல் வருத்தம் அதைக் கொண்டு வருவதிலிருந்த சிரமத்தில் கூடிய பயம் இவனுக்கு அப்படியொரு நிலைமையை உண்டாக்கி விட்டது. அதைத் தடை செய்யாம லிருந்திருந்தால் தேவலாமெனத் தோன்றியது. சவூதியின் தேசிய கௌரவம் சிதைவதாய்ச் சொல்லப்பட்ட காரணம் இவனுக்கு நியாயமாய்ப் படவில்லை. சவூதியின் நீதியை உயர்த்திக் காட்டுவதாய்ச் சித்தரிக்கப்பட்ட படத்தைத் தடை செய்வது அர்த்தமில்லாததாய்ப் பட்டது இவனுக்கு.

இளவரசியாய் நடித்தவள் உணர்வு பூர்வமாய்த் தன் பாத்திரத்தைச் செய்திருந்தாள். அது கற்பனைக் கதையாக இல்லாமல் சவூதியின் வாழ்க்கைச் சித்திரமாய் இருந்தது. அமெரிக்க கலைஞர்கள் மனதை உலுக்கும்படியாய் வீடியோ படமாக்கியிருந்தனர். அதை உலகம் முழுவதுமாய்த் தடை செய்திருப்பது நிாயயமாய்த் தோன்றவில்லை இவனுக்கு.

**/சி.ஆர். ரவீந்திரன்/**

அந்த இளவரசியின் கனவுகளை உயிர்த்துடிப்போடு படமாக்கியிருந்தது ஒரு அபூர்வமான சிரத்தையாய்ப் பட்டது. சிதார் வாசிக்கிற அந்த அமெரிக்க இளைஞனின் மீது இளவரசியின் மோகம் கலையின் சக்தியை உணர்த்தியது. அவள், ஒருவனுக்கு நான்காவது மனைவி என்கிற உணர்வையும் மீறி தொலை தூரத்தில் வாழ்ந்த அந்தக் கலைஞனிடம் மோகம் கொண்டு, அமெரிக்க மண்ணிலிருந்து அந்த இளைஞனை சவுதிக்கே வரவழைத்துக் கடற்கரையோர மாளிகையில் அவனைப் பல இரவுகள் சந்தித்து மகிழ்ந்ததில் அவளுடைய வாழ்க்கை அர்த்தப்பட்டதாய்த் தோன்றியது இவ

படிப்பகம்

www.padippakam.com

னுக்கு. இளவரசிச்குத் தாயே துணையாக நின்றது இவனுக்கு நம்ப முடியாததாகப் பலமுறை தோன்றியதுண்டு. அவனோடு நாட்டை விட்டே ஓடி விடச் செய்த பிரயத்தனங்கள் இவனுக்கு பிரமிப்பூட்டுவதாயிருந்தது. கல்வி பயிலவும், தொலைத் தூர நகரங்களைப் பார்க்கவும் இளவரசி முயன்றதில் பாஸ்போர்ட் கிடைக்காத பரிதாபம் இவனுக்கு வேதனையாயிருந்தது. கள்ளத் தனமாய் பாஸ்போர்ட் தயாரித்து விமானத் தளத்திற்குள் நுழைகையில் இளவரசியின் அசைவுகளைக் கண்டவன் சந்தேகத்தில் அவளைக் கைது செய்வது கொடுமையான அனுபவமாய்ப் பட்டது.

சட்டத்தின் முன்பு எல்லோருமே சமமென்பதை சவுதியில் இவன் நேரிடையாகப் பார்க்க முடிந்தது. பிடிபட்ட இளவரசிக்கும் அமெரிக்க இளைஞனுக்கும் மரண தண்டனை வழங்கப் பட்டது ஒரு கொடுமையாகவே இவனுக்குத் தோன்றியது. முச்சந்தியில், கருப்புத் துணியை விரித்து முழந்தாளிட்டுக் குனிந்த அமெரிக்க இளைஞனின் தலை துண்டிக்கப் பட்டதைப் பார்க்கையில் இவன் பதைபதைப் புற்றான். இளவரசியைக் சுட்டுக் கொன்ற போது அவளின் துடிப்பு உயிர் வதையின் கொடூரத்தைக் காட்டுவதாயிருந்தது. இளவரசியின் அண்ணனின் இராணுவச் செல்வாக்கும், அவர்களின் தாத்தாவின் முயற்சிகளுமே அவளைச் சுட்டுக் கொல்லும் உத்தரவுக்கு காரணமா யிருந்ததாய்க் கேள்விப்பட்டான் இவன்.

அப்படிப்பட்ட கடுமையான தண்டனைகள் வழங்கப் படுவதாலேயே சவுதியில் குற்றங்கள் அரிதாய இருப்பதாக இவன் ஊகம் கொள்வதுண்டு. சிக்கலான எந்த வழக்கும் மூன்று மாதத்திற்குள் முடிந்து விடுவதைப் பார்க்க இவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

குற்றவாளிகளை வெள்ளிக் கிழமை நாட்களில் முச்சந்தியில் வைத்துத் தண்டிப்பதைப் பல முறை பார்த்திருக்கிறான் இவன். கசையடி வாங்கிச் சுருண்டு விழுபவர்களையும் கண்டிருக்கிறான். அதுவெல்லாம் சாதாரணக் குற்றங்களைச் செய்பவர்களுக்கே என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறான். திருட்டுக் குற்றங்களுக்குக் கையை வெட்டித் தொங்கவிடுகிற தண்டனையையும் நேரில் கண்டிருக்கிறான். மௌனமாய் அதைக் குற்றவாளிகள் ஏற்கக் கண்டு இவன் வியப்படைந்திருக்கிறான் விசாரித்ததில், வேனில் வந்து இறங்குவதற்கு முன்பே 'குளோரராபாம்' ஊசி குத்தப் பட்டுவிடுவதாகவும் கேள்விப்பட்டான். தண்டிப்பவர்கள் மதத்தைச் சார்ந்த 'முத்துவாஸ்கள்' என்பதைக் கேள்விப் பட்டதில் இவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

யாரும் பிற மதச் சின்னங்களை அணிந்து கொண்டு தெருவில் நடமாட முடியாது

படிப்பகம்

www.padippakam.com



வெளிநாட்டுப் பெண்கள் கூட பர்தா இல்லாமல் நகரில் உலவ முடியாது. ரம்ஜானின் போது நாற்பது நாட்களும் விரதமிருக்க வேண்டிய நிலைமையை இவனும் அனுபவிக்க வேண்டியிருந்தது. நிறையச் சம்பாத்தியம் கிடைக்கிறது என்கிற தெம்பில் இவன் அவைகளைச் சமாளித்துக் கொண்டிருந்தான்.

ரியாத் விமான நிலையத்திற்கு இவன் போய்வருவதுண்டு. நவீன முறையில் மிகுந்த வசதிகளுடன் அமைக்கப்பட்டருந்த அந்த விமான நிலையத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது பிடிக்கும். விமானங்கள் வந்து போகிற இரைச்சல் கூட பழக்கமாகி இசையாகத் தோன்றியது. உலகத்து மக்களையெல்லாம் அங்கே பார்க்க முடிந்தது இவனால். டெஹரானுக்கும் வேடிக்கை பார்க்க இவன் போய் வருவான். அராம்கோ எண்ணெய் கிணறு இவனுக்கு வியப்பூட்டுவதாயிருந்தது. ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை அங்கே ஒரு சேர பார்ப்பது இவனுக்கு பிடிக்கும். சவுதியின் சட்டங்கள் கடுமையாக இருந்ததில் எங்குமே இயல்பான கட்டுப்பாடு இருப்பதை இவனால் கவனிக்க முடிந்தது.

"ஐயோ! அடிக்காதிங்க! நானெடுக்கல! பணம் என்னடது"

திடுக்கென விழித்தவன் போல பக்கமாய்ப் பார்க்கையில் பஸ் மெல்ல நிற்கத் தொடங்கியது. நாகரிக உடையணிந்த நான்கு பேர் ஒருவனைச் சுற்றி வட்டம் போட்டிருந்தார்கள். நடுவிலிருந்தவன் கந்தலாய்ச் சட்டை போட்டு லுங்கி கட்டியிருந்ததைப் பார்க்கையில், 'பிக்பாக்கெட்காரன்' பிடிபட்டு விட்டதாய் இவனுக்குத் தோன்றியது. அவன் பிடரியிலும், மார்பிலும், முகத்திலும் மாறிமாறி மற்றவர்கள் குத்தினர். பக்கத்திலிருந்தவர்கள் விலகிச் சென்றுவிட அவன் கோரமாகக் கத்துவது சகிக்க முடியாததாயிருந்தது. கூர்ந்து கவனித்த இவனுக்கு எதிர்பாராத விதமாய் ஒரு குத்து வலது பக்க முக எலும்பில் விழுந்தது. கண்கள் பொறி கட்டுவது போல் வலித்தது. கோபம் பீரிட்டாலும் அதிர்ச்சியடைந்தவனாயிருந்தான்.

திரும்பவும் கவனிக்கையில் சிவப்பாய்க் கொழுகொழுவென்றிருந்தவன், கந்தலானவனின் பாக்கெட்டிலிருந்த பணத்தை விசுக்கென எடுத்துப் பிரித்து எண்ணினான். அவனோடு வந்தவர்களும் பணத்தைக் கூர்மையாகக் கவனித்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

''ஐயோ! இன்னக்குக் கூலி வாங்குன பணம். அண்ணா இது என்ர பணம். கூலிப்பணம். குடுத்துடுங்க!''

இன்னொருவன் அவனைக் காலர் பக்கமாய்ப் பற்றி வேக மாகத் தள்ள மல்லாந்து விழுந் தான் சுந்தல்காரன். ஓரமாய் பஸ் ஒதுங்கி நிற்கவும், அடி கொடுத்தவர்கள் பஸ்ஸைவிட்டு பரபரப்புடன் இறங்குவதைக் கவனித்த இவனுக்கு அறியாத திருப்தி. சுந்தல்காரன் அடி வாங்கியதில், முந்தைய நாள் பட்ட வலியின் அழுத்தம் குறைந்த மாதிரி இருந்தது

''சையத் அண்ணே! ஐயோ! சையத் அண்ணே! காசைப் புடுங்கிட்டு ஓடுறாங்கண்ணே!''



சுந்தல்காரன் பஸ்ஸை விட்டு இறங்கிக் கத்திக் கொண்டே ஓடுவதைப் பார்க் கையில். அசாத்தியமாய் நடிப் பது போலத் தோன்றியது இவ னுக்கு.

பஸ்ஸிலிருந்தவர்கள் மெல்ல முணுமுணுத்தபடி ஒருவரை ஒருவர் பரர்ப்பதைக் கவனிக் கையில் இவனுக்கும் குழப்பமா யிருந்தது.

''அவனுங்க நாலு பேரும் பிக்பாக்கெட்டுக. தினமும் கருப் பகவுண்டர் வீதியில ஒண்ணா ஏறுவானுக. இந்த எடத்துக்கு வாரதுக்குள்ளெ பணத்தெ அடிச்சிருவானுக!'' டிபன் பாக்ஸை மடியில் வைத்துக் கொண்டிருந்த பையன் சொன் னதைக் கேட்டவர்களின் முகம் கருப்பதாய்த் தோன்றியது இவ னுக்கு.

''பேய்! வாயெ வெச்சுட்டு சும்மா இருக்க மாட்டெ! நாளைக்கு உனக்கும் 'பிளேடு' போட்டுருவானுக,'' கண்டக் டக்டர் சொல்லிக் கொண்டே, தோள் பையை விரித்துக் குலுக் குவதைக் கண்ட இவனுக்கு எரிச்சல் கூடியது. முணுமுணுத் தவர்கள் வாயடைத்துத் திரும் பியதைப் பார்க்க அருவறுப் படைந்தான். இவனுக்கு ஒவ் வொரு முகமும் சந்தேகத்திற் குரியதாய் தெரிந்தது.

இறங்க வேண்டிய இடம் வந்ததும் வேகமாய் எழுந்து பஸ்ஸைவிட்டு இறங்கினான். பஸ்மறையவும் வேகமாய் நடந் தான். வீதியில் நாய்கள் முறுக, வேகத்தைக் குறைத்தான்.

சிவகுரு திண்ணையில் அமர்ந்திருப்பதைப் பார்க்கை யில் இவனுக்குக் கால்கள் துள் ளின. சிவகுருவுக்கு இதையெல் லாம் சகித்துக் கொள்கிறவர் களைப் பார்தால் கோபமாய் வரும். பொதுவில் கடுமையாய் எதையாவது சொல்வான். ''ரோம் நகரம் தீப்பற்றி எரி கிற போது நீரோ ஃபிடில் வாசித்தானம். நம்ம ஜனங்க ளும் அப்படித்தான். தேசமே எரியறப்ப சினிமாப் பார்க்கி றார்கள்!'' இதைவிடவும் கேவ மாய்ப் பேசுவான்

படிப்பகம்

www.padippakam.com



இவனும், சிவகுருவும் திண்ணையில் எதிரெதிரே அமர்ந்து பேசிக் கொள்ளும்போது வீட்டிலிருந்தவர்கள் மௌனமாய்க் கேட்பதைக் கவனித்தான். பஸ்ஸில் நடந்ததையெல்லாம் கேட்ட சிவகுரு, மௌனமாகத் தெருவைப் பார்ப்பது இவனுக்கு வியப்பாயிருந்தது.

''நாடே நாசமாயிட்டுது. எவனெ நம்பறதுன்னே தெரியலெ! சவுதியா இருந்தா இதுக்குக் கையெ வெட்டிக் காயவச்சிருவான். நியூஸ் பேப்பர் படிக்கவே அசிங்கமாயிருக்கு. கொலை, கொள்ளை கற்பழிப்பு, ஊழல், ரகளை! அப்பா! சகிக்க முடியலே. இப்படியெல்லாம் இருக்குமுன்னு சவுதியில இருந்து கிளம்பறப்போ நான் நினைக்கவே இல்லே. டர்ட்டி பீப்பிள், வெரி டர்ட்டி பீப்பிள்!'' இவன் பொருமிக் கொண்டே போவதை சிவகுரு நிதானமாகக் கேட்பதைக் கவனித்த இவனுக்கு ஏமாற்றமாயிருந்தது. நன்றாகச் சம்பாதித்து அனுபவித்துத் திரும்பிய இவனைப் பார்த்து அவன் பொறாமை யடைகிறானோவென இவன் சந்தேகப்பட்டான்.

''எனக்கென்னமோ அது சரியாத் தோணலே! அடுத்த நாளைக்கு வாழ்க்கை, இந்த நாட்லே உத்திரவாதமா எத்தனை பேருக்கு இருக்கு? பத்து சதவீதம் பேருக்குக் கூட நாட்டில வாழ்க்கைக்கான பாதுகாப்பு இல்லே. அப்படின்னா இதெல்லாம் சகஜம், இங்கே. அப்படிப்பட்ட தண்டனையெல்லாம் கொடுக்கறதுன்னா நியாயமாப் படலே!'' சிவகுரு பேசுவதைக் கவனித்த அவனுடைய முகத்தில புன்னகை படர்வது மாதிரியிருந்தது.

''என்ன வழக்கத்தெ விட வித்தியாசமா பேசற?'' இவன் வியப்போடு அவனைப் பார்த்துக் கேட்டான்.

''மனுசனோட வாழ்க்கைக்கு சவுதியிலே உத்திரவாதம் இருக்கு! அதையும் மீறித் தப்பு செய்யறவனைத் தண்டிக்கறதுலே ஒரு நியாயமிருக்கு. இங்கே இருக்கறவன் அப்படிச் செய்யறதுக்குக் காரணமா இருக்கறவங்களெ தண்டிக்கணும். ம்... அவங்களெ யார் தண்டிக்கறது!'' வாசலைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்த சிவகுருவின் முகத்தில் கருமை படர்வதைப் பார்க்க முடிந்தது இவனால்.

சவுதியிலிருந்து இவன் வாங்கி வந்திருந்த நீளமான சிகரெட்டை சிவகுரு வாங்க மறுத்து, பீடியைப் பற்றி ஊதுவதைக் கவனிக்கையில் வருத்தமாயிருந்தது. சவுதியைப் பற்றி இவன் சொன்ன சங்கதிகளெல்லாம் சிவகுருவுக்குப் பிடிபடுவதாய்த் தோன்றவில்லை இவனுக்கு. ★

படிப்பகம்

www.padippakam.com

# மின்னலைப்போல் ஒரு சொல்!

செயல் வீரனாகச் சிந்தனை செய். சிந்தனையாளனாகச் செயல்படு.

—ஹென்றி பெர்க்ஸன்

நீ கோபமாயிருக்கும் போது வார்த்தைகளில் உன்னைக் கொட்டிக் கவிழ்த்துப் பார். காலத்துக்கும் வெட்கித் தலை குனியும்படியான அதியற்பமான சொற்பொழிவைப் படைத்திருப்பாய்.

—ஹென்றி வார்ட்பீச்சர்

கலை என்பது உண்மையை நாம் உணர்வதற்கு ஒத்தாசை செய்யும் பொய்.

– பாப்லே பிகாஸோ

கலை இல்லையேல், யதார்த்தத்தின் முள்ளப்பன்றித்தனம் இந்த உலகத்தைச் சகித்துக்கொள்ள முடியாததாக்கிவிடும்.

—ஜார்ஜ் பெர்னாட்ஷா

தன்னைப் பாதித்துக் கொள்ளாமல் படிப்பது என்பது செரிக்காமல் தின்பது போல.

—எடமண்ட் பர்க்

நீ ஒரு சுவாரஸ்யமில்லாதவனாயிருந்தால் உன்னை ஒன்றுமே சுவாரஸ்யப்படுத்த முடியாது.

—ஹெலன் மெக்கில்னஸ்.

நீ மெய்யாகவே நடைமுறையில் எல்லோருடைய சகோதரனாகவும் மாறாத வரையில் சகோதரத்துவம் நிஜப்படப் போவதில்லை. சகோதரத்துவம் ஒன்றே சுதந்திரத்தைப் பாதுகாக்கும்.

—டாஸ்டோவஸ்கி

நம்மில் பலர் குழந்தைகளாய் இருப்பதை முடிவுக்குக் கொணரும் முன்பே குழந்தைகளுக்குப் பெற்றோர்களாகி விடுகிறோம்.

—மிக்னன் மக்வாலின்.

இந்த உலகில் மனிதர்கள் மதிப்பதெல்லாம் உரிமைகளையல்ல; சலுகைகளைத்தான்.

—ஹெச்.எல்.மென்கன்.

பிறருக்குச் சுதந்தரத்தை மறுக்கிறவர்கள், சுதந்திரம் மறுக்கப்பட வேண்டியவர்கள்.

—ஆப்ரஹாம்லிங்கன்.

படிப்பகம்

www.padippakam.com

# எழுத்தாளனின் மேன்மை

இது அதிசயம்தான். இறைவனின் படைப்பை எழுத்தாளனின் படைப்பே ரசிக்கும்படியாய் இருக் து. இறைவனுடைய படைப்பில் நாம் வெறும் லை போடுகிற யாரோ.' ஆனால், எழுத்தாளனு ய படைப்பிலோ நாம்தாம் மாலை போட்டுக் கொள் ள்கிற மகாபுருஷர். அதனால்தான் இந்த ரசனை. ாவது அசலை விட நகலில் அப்படியொரு ரசனை. ின் வீச்சும் விரிவும் நம் புலன்களில் அடங்காமையி ', அதன் பரிமாண பிரம்மாண்டம் நம்மை ஜடமாக்கி ிகிறது; அல்லது கடுகாக்கி விடுகிறது. ஆனால், ் அப்படியல்லவே நகலுக்கு முன்னால் நாமல்லவா பகர்கள்! கண்ணுக்குள் அடங்காத ஒரு பள்ளத்தாக் ப் பார்க்கும்போது நாம் துரும்பாய்க் கரைந்துபோய் அசாதாரணத்தில் ஊமை ப்த்தான் நிற்க முடிகிறது. தயே கைக்குள் அடங்கும் யான படமாக்கிப் பார்த் ல் பள்ளத்தாக்கின் தெறிப் ன விஷயங்கள் யாவும் ளிவாகப் புலப்பட்டு அதை க்கமுடிகிறது. புலன்களை ு ஆள்கிறதோ அதுதானே ம் கண்ட ரசனை? எழுத்



ளனின் படைப்பு இப்படி ரசனைக்குக் களம் அமைப் ால் அல்லவா அதன் ஆழமும் அர்த்தமும் நம்மில் ஓர் னந்தமான விழிப்பை அமல் படுத்துகின்றன? ஆம். றைவனின் படைப்பு ஒரு சாதனை. எழுத்தாளனின் டைப்பு ஒரு பாவனை. சாதனையில் நம்மை அடித்துச் ய்க்கிற கம்பீரம் இருக்கிறது. பாவனையில் நாம் அனு ித்துச் சுவைக்கிற கவிதை இழைகிறது; கை கூப்பி ணங்குகிற புனிதமும் ஒளிர்கிறது. சொல்லப் போனால் ழுத்தாளன் திறந்து வைக்கும் பாவனைச் சாளரங்கள் ியாகவன்றோ நம்மில் பெரும்பாலோர் இறைவனின் தனைச் சிகரங்களைப் பார்க்க முதன்முறையாகத் லை தூக்க முயல்கிறோம்? ஆக, நம்மைத் தலைதூக்க வக்கிறவன் எழுத்தாளனே அல்லவா?

படிப்பகம்

Kavithaasaran, Jan. 1992. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY In TAMIL R. Dis. 5479/90

www.padippakam.com

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

# மூசா இலக்கியம்

MUSA ILAKKIYAM

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019.



சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்